R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. ஈரோடு, பவ-ஹு சித்திரை-மீ 24 உ (6—5—1934) மலர் 24.

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டட், ஈரோடு.

3 அணா வெளியீடுகள்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

**மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:—** இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

**பிரபஞ்ச உற்பத்தி:—** இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

**பிரகிருதிவாதம்:—** இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

**வெ. ரா. சொற்பொழிவு**
விலை அணா 2.

**அகத்தியர் ஆராய்ச்சி**
விலை அணா 2.

**இராமலிங்க சுவாமிகள் பாடல்**
விலை அணா 2.

**சுயமரியாதைப் பாடல்**
விலை அணா 2.

**கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணா 2.

**சுயமரியாதை தாலாட்டு**
விலை அணா 2.

**சோதிடப் புரட்டு**
விலை அணா 2.

**பர்னார்ட்ஷா உபந்யாசம்**
விலை அணா 1.

**இலங்கை உபந்யாசம்**
விலை அரை அணா.

**கத்தோலிக்கர் வீண் கூச்சல்**
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| சிதம்பர ரகசியம் | ... | 0—8—0 |
| சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | | 0—4—0 |
| மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | | 0—8—0 |
| பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | | 0—6—0 |
| மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பரிட்சை முறையும் | ... | 2—0—0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை | ... | 0—6—0 |
| சுயராஜ்யம் யாருக்கு | ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் | ... | 0—12—0 |
| சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் | ... | 2—0—0 |
| பகுத்தறிவு கீதம் | ... | 0—1—0 |
| காந்தி கிட்டு | ... | 0—1—0 |

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து செல்ல வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட் ஒரு வருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள்!!

# சோஷியலிசம.

உலகறியப் பேரறிஞர் ஜார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ்சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

### சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

### போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,
**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# சுயமரியாதை நீதி.

(தோழர்சே. தே. நாயகம்)

12—4—1934-ல் வெளிவந்த லோகோபகாரியில் மேலேகண்ட தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை அச்சிடப்பட்டிருக்கிறது. அது "ஆஸ்திகன்" என்ற பத்திரிகையின் மறுவெளியீடு என்றோ, 'ஆஸ்திகன்" புனைபெயர் கொண்டார் ஒருவருடைய கட்டுரை என்றோ தெளிவாகத் தெரியவில்லை. எனினும் சுயமரியாதை என்பது வடமொழிச் சொற்றொடர் என்றும், அதற்குத் தன்மானம் என்பது தமிழாகும் என்றும் துவக்கியவர், ஆஸ்திகன் என்ற வடமொழிப் பெயரிலும் அதைக் கூடியவரை வடமொழி எழுத்திலே எழுதுவதிலும் பற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர்கள் தன் மானம் பேணலைப் பெரிதும போற்றிவந்திருக்கிறார்கள் என்றும், பிறர்க்கு இடையூறின்றி ஒவ்வொருவரும் தன் மனப்படி வாழ உரிமை உடையர் என்றும் துவக்கி அதற்கு மாறாகத் தன் மானக்கொள்கையுடையார் பிறர் மானத்திற்குப் பழுது செய்கிறார்கள் என்றும், பிறர் கூட்டத்தில் வந்து தங்கள் கொள்கைகளைப் புகுத்த வலுச் செய்கிறார்கள் என்றும், சொல்லி, இதற்கு நியாயத்தைக் கூறி வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டு முடிக்கிறார். பண்டைத்தமிழ் மக்கள் தன்மானம் பேணி வாழ்ந்தார்கள் என்றும், மதியாதார் முற்றம் மதித்து ஒருகாற் சென்று மிதியாமையையும், உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம் மனையில் உண்ணாமையையும், மானமழிந்தபின் வாழாமையின் இனிமையையும் குறிக்கும் தமிழ் நூல்கள் அதற்கு சான்று என்றும் கூறுகிறார். ஒரு பார்ப்பன ஆண் மற்ற மூன்று இனப் பெண்களுடன் கூடிவாழலாம் என்றும், பிந்திய மூன்று இன ஆண்முதல் இனப் பெண்ணைப் புணர்ந்தால் இரும்புத் தூணைப் பழுக்கக் காய்ச்சி அணைக்கச் செய்யப்பட வேண்டும் என்றும் மநு நீதியில் சொல்லியிருப்பதை ஒப்புக்கொண்ட பண்டைக்காலத் தமிழன் தன் மானம் பேணலை எவ்வளவு தூரம் நடவடிக்கையில் காட்டினார்கள் என்று தெரியும். பிறர் மானத்தைக் கெடுக்க எண்ணிய மநு என்பார் ஒரு [illegible] அதை எழுதினரென்றும் அதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ளவில்லை எனவும் சொல்லலாம் மநு வடமொழியில் எழுதினதைத் தமிழ்மக்கள் படிக்கும் பொருட்டுத் தமிழ்ப்படுத்தியது யார்? அக் கொள்கையை ஒப்புக்கொண்டு அதைப்பரப்ப விருப்பங் கொண்டவராகத் தானே இருந்திருக்கவேண்டும். அப்படித் தமிழ்ப் படுத்தியவரும் பிறர் மானங்கெட விரும்பிய குறும்புப் பார்ப்பனராக இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அம்மொழிபெயர்ப்பு தமிழ்நூலைத் தலைமுறை தலைமுறையாகக் கை கடுக்கக் கண் பூக்க ஏட்டில் எழுதிப் போற்றி வந்தது யார்? அவர்கள் தமிழராகத்தானே இருந்திருக்கவேண்டும். தன்னை இழிவு படுத்தும் நூலைப் பேணி வந்தவர்கள் தன் மானம் பேணுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள் என்று நம்ப இடமிருக்கிறதா? மநு நீதி கண்ட மன்னன் என நம் முன்னோர்கள் பெரும் பெயரிட்டழைத்த தமிழ் மன்னர்கள் மேலே சொன்ன மநு நீதியையும் சேர்த்துக்கண்டவர்கள்தானே. தவிரவும் காளிகோயில்களில் ஆடு கோழிகளைக் கொலை செய்வது கூடா ஒழுக்கம் என்று துண்டுத் தாட்களிலும், கட்டுரைகளிலும் ஓயாமல் வெளியிடுவது எதைக் காட்டுகிறது? அவ்வழக்கம் நம்மக்களிடை பரவிசிற்கிறதென்பதையா, அவ்வழக்கம் நம்மிடை இல்லை என்பதையா? "ஆடு, மீன், கோழி, அருந்துவோர்க்கெல்லாம் வீடில்லை என்றுரைக்கும் 'வேதம்" என லோகோபகாரியில் அடிக்கடி அச்சிடுவது எதைக் காட்டுகிறது? ஆடு, மீன், கோழி அருந்துவோர் தமிழ் நாட்டில் பலர் இருக்கிறார்கள், இன்றும் பெருகுகிறார்கள் என்பதையா, அப்படிப் பட்டவர்கள் இல்லை என்பதையா? உற்று நோக்குவோர்க்கு முந்தியதைத் தான் என்பது தெரியும். ஐம்பது அல்லது நூறு ஆண்டுகட்குப்பின் இந்த லோகோபகாரித் தாளை ஒருவர் படித்துவிட்டு, 1934-வது ஆண்டில் தமிழ்நாட்டில் புலாலுண்போர் இல்லையென்று இதிலிருந்து முடிவு செய்வதை ஒக்கும், தமிழ் மூதுரை நூல்களைப் படித்துப் பண்டைத் தமிழ் மக்கள் மானங் காத்து வாழ்ந்தார்கள் எனச் சொல்வது, மதியாதார் முற்றம் நுழைவோர் பலர் இருந்ததையும், வரீர், வரீர், என்று சொன்னார் வீட்டில் நுழைந்து காத்திருந்துண்டோர் பலர் இருந்ததையும், மானங்கெட்டு வாழ்ந்தோர் பெருகி வந்ததையும் பார்த்து, அவர்களுடன் பிறந்த, தற்காலம் போல் அக்காலத்திலுமுள்ள தன் மானக் கொள்கையுடைய, சிலர் மனமிடிந்து சொன்ன சொற்கள் நாமிப்பொழுது மூதுரையிற் படித்து மயங்குவன. ஒரு வேளை முன்வாழ்ந்தோர் மானமழியாது வாழ்ந்ததாகவே வைத்துக்கொள்வோம். அது நமது இந்நாளை மானக்கேடான வாழ்வை இன்னும் இழிவு படுத்தியல்லவா காட்டுவதாகும். இருப்புப் பாதை நிலயத்தில கொல்லரைவிட கருத்த தோலும் இருப்புப்பாதை எரிவண்டிக்கரி ஆளைவிட அழுக்கடைந்த துணியும், தோளில் தன் வேலையைக் குறிக்கும் பருத்தி நூலும் உடைய ஒருவர் வடை விற்றுக்கொண்டு வருகிறார். அவரைப் போல் குற்றேவல் செய்யுங் குறியாகிய பருத்தி நூலணிந்த, வண்டியிலுள்ள மற்றொருவர் முந்தியவரைக் கூப்பிட்டு அவரிடமுள்ள வடைகளை கையால் தொட்டும், மூக்கால் முகர்ந்தும், ஒருதுண்டு பிட்டு வாயில் போட்டுப் பார்த்தும், தன் மனைவியையுங் குழந்தைகளையும் அவ்வாறே செய்து பார்க்கச் செய்தும் தங்களுக்கு வேண்டியவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு மீதத்தைப் பண்டம் விற்றுப் பிழைக்கும் பருத்திநூல் காரரிடம் போட்டுவிடுகிறார். அதே வண்டியில் பக்கத்திலிருந்த குற்றேவல் செய்யுங் குறிநூல்காரரைப் பணி ஆளாக கொள்ளும் பணைநிலமையிலுள்ள நூலணியாத் தமிழர் ஒருவர், "சாமி, எனக்கும் ஒரு அணாவுக்கு வடை", என்கிறார். பக்கத்திலிருந்த பருத்திநூல்காரரும் அவர் மனைவி மக்களும் தொட்டு, முகர்ந்து பிட்டு வாயில்போட்டுக் கழித்த வடைகளை அவர் போட இவர் ஏந்திக் கொள்கிறார். அவற்றுள் ஒன்று பிளவுண்டு உள்ளிருந்து நூல் வருவதைப் பார்த்து ஊசவடை தனக்கு வேண்டாம் என்கிறார். "சூத்திரன் தொட்ட வடையை நான் வாங்குவேனா?" எனப் பண்டம் விற்ற பருத்திநூல்காரர் சொல்கிறார். "சாமி சொல்வது சரிதானே" எனப் பக்கத்திலிருப்பவர்கள் எல்லாம் கூடி உரைக்கிறார்கள். வயிறு பசித்த தமிழர் ஒரு அணாவைப் பருத்தி நூல்க் காரரிடம் கொடுத்துவிட்டு, அவருடன் வந்து அவர் பக்கத்தில் நின்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த அவருடைய நாயினிடம் ஊசைவடையை எறிந்துவிட்டு, இடுப்பிலிருந்த பட்டுப்பையிலிருந்து நீறை எடுத்துக் கிழக்குமுகமாகத் திரும்பிச் சம்மணமிட்டு நெற்றியில் பூசிக் கொண்டு, காய்ந்ததால் ஊசாத மீந்த வடையை வாயில் போட்டு வலுத்த பல்லால் மெல்லுகிறார். பண்டம் விற்றவருடைய தம்பி ஒருவர் தண்ணீர்கொண்ட வாளியை ஒரு கையிலும், தகரக் குவளை கோர்த்த கம்பியை இன்னொரு கையிலுந் தாங்கி, உடல் வியர்வையில் சில சொட்டுகள் இரண்டிலும் விழ வருகிறார். மனைவி மக்களுடன் வயிறார உண்ட பருத்திநூல்காரர் தன் செம்பை வாளியில் முக்கித் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு மறுபடியும் முக்கி, நிறை செம்பு எடுத்துக்கொள்கிறார், பசிக்கு ஊசவடை உண்டுவிட்டத் தமிழ்ப் பெருமகர் கம்பியில் தொங்கிய குவளையை எடுத்து ஏந்த, வாளியில் கிடந்த இன்னொரு குவளையால் ஊற்றின தண்ணீர்விழ வாங்கி வாயில் கிடந்த வடை கனையக்குடித்துவிட்டு மறுபடியும் சிறுநீர் வாங்கிக் குவளையை அலம்பித் தண்ணீரை வடித்து கம்பியில் கோர்த்துவிட்டு மறுபடியும் கிழக்குநோக்கிச் சம்மணமிட்டு நீறணிந்து, "வேயுறு தோளிபங்கன்" எனத் துவக்கிய கோளறுப்பதிகம் பாடுகிறார். மானங்கெடாமல் வாழ்ந்ததாகக் கூறப்படும் பழைய தமிழர்களின் பின் தோன்றல்களின் மேற்கண்ட தற்கால மானக்கெட்ட வாழ்க்கையைப் பார்த்துவிட்டு, "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றும்

"இன்றி யமையாச் சிறப் பின
வாயினுங்
குன்ற வருப விடல்"

என்றும் பாடம் ஒப்பிப்பதுதான் மற்ற நாம் செய்யக்கூடிய வேலையாகும். சோற்றுக்கடையில் சாப்பிட வரும் பருத்தி நூல்காரர்கள் செருப்பைக் கழற்றியிருக்கும் இடத்திலும், அவர்கள் சாப்பிட்ட எச்சிலை அப்புறப் படுத்தி இடத்தைத் துப்புரவு செய்த துடைப்பமும் நாற்ற நீர்ச்சட்டியும் இருக்கும் இடத்திலும், உட்கார்ந்து இலையில் போட்டதைச் சாப்பிட்டு விட்டு, இலையை எடுத்து வெளியில் நிற்கிற கழுதையிடம் சேர்த்துவிட்டு சாப்பிட்ட இடத்தை நாற்ற நீரால் தேய்த்துவிட்டுக் கையைக் கழுவிச் செம்பைக் கவிழ்த்திவிட்டு, இடுப்பிலிருக்கிற துட்டைக் கொடுத்துவிட்டு, நீறணிந்து வெளியில் வரும் தமிழப் பெருமக்களைப் பார்த்து, "உண்ணீர், உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடிபெறும்" என்றும்,

தலையி னிழிந்த மயிரனையர்
மாந்தர்
நிலையினிழிந்தக் கடை

என்றும் பாடிய தமிழறிஞர்களின் தம்மினப் பற்றையும் நுணுக்க அறிவையும் யார் தான் பாராட்ட மாட்டார்கள்? கோயிலில் கையாலுந் துணியாலுந் தொட்டால் தீட்டாகிவிடுமென்று கையைத் தட்டியும் வாழை மட்டையாலடித்தும் விலக்கிக் கொண்டு போவதற்கு இடம் விட்டுக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் பெருந்தன்மைக்குரியதாகும். எரிகிற சூடனை முதலில் நிற்கிற பருத்திநூல் காரர்களுக்கும், மனைவி மக்களுக்கும் தனித்தனி தொட்டுப் பார்க்க விட்டு விட்டுத் தமிழர் நூற்றுக்கதிகமானவர் இருக்குமிடத்தில் கொட்டிவிட்டுப் போவதும், அது அவிந்துவிடுமுன் அதன் சூட்டைக் கண்ணிமையால் அளந்து பார்க்க ஆண் பெண் முறையின்றிப் போட்டி

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க,

# இதுவென்ன கொடுமை?

(தோழர் M. K. அழகப்பா)

பண்டைக்கால நாகரீகம் பெற்றதெனவும், புண்ணியவான்களும், கற்புக்கரசிகளும் உதித்ததெனவும் தவசிரேஷ்டர்களும் யோகீஸ்வரர்களுமிருந்ததெனவும் பழம்பெருமை பேசப்படும் நம் இந்தியாவிலே 18 லட்சம் சதுரமைல் விஸ்தீரணத்தையும், 7 லட்சம் கிராமங்களையும், 2,300 முக்கிய நகரங்களையும் தன்னகத்தேயுடைத்ததாயிருந்தும் 35 கோடி மக்களில் 100 க்கு 98 மக்களுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க வீடில்லை, படுக்கப் பாயில்லையென்றால் இதுவென்ன கொடுமை. கொடுமையென்று கேட்கின்றேன். யாண்டு நோக்கினும் பசி, தாகம், உடை, வீடு என்ற வறுமையின் ஆற்றல் மலிந்திருப்பதற்குக் காரணம் யாது. நிலங்களில் போதுமான விளைவில்லையா? புஞ்சைகளில் தானியங்கள் விளையவில்லையா? அல்லது மக்கள் வசிப்பதற்குப் போதுமான பூமியில்லையா? வேறு நாட்டில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? பின் ஏன்? இவ்வித வறுமை நோய் பிடித்து மக்களை வறுத்துகிறதென்னில் நாட்டில் விளையும் பொருள்கள் எப்பொழுதும் போலவே தான் விளைகின்றன. நிலங்களில் தொழிற்சாலைகளில் பாடுபடும் மக்கள் எப்பொழுதும்போலவே தான் உழைத்துப் பாடு பட்டுக்கொண்டுவருகிறார்கள், ஆனால் பாட்டாளி, விவசாயிகள் பாடுபடுவதற்குத் தகுந்த பலன் அடைய முடியவில்லை தொழிலாளிகளின் வேலைக்குத் தகுந்த கூலி கிடைக்கவில்லை! இவ்வாறு சப் பல்லாயிரக் கணக்கான பாட்டாளி, விவசாயி, உழைப்பாளிகளின் முழுப் பயனையும் முதலாளி, ஜமீன்தார், மிராசுதார, சிற்றரசர்களென்னும் ஒரு சிறு சாரார் ஏகபோக உரிமை கொண்டாடி அடைந்துவருகின்றார்கள், இவர்களுக்கனுகூலமாகவே சட்டதிட்டங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இச் சிறு குழுவினரிடத்தே பணம் பெருகதிமிரானதுதாசிவேசிகளை மென்மேலும் உண்டாக்கச் செய்கிறது. காடாககிடந்தவிடங்களெல்லாம் கோவில்களாக மாறச் செய்கிறது. தேரென்றும், திருவிழாவென்றும் கண்ட கண்டபடி மனம் போனவாறு பல்கச் செய்கிறது. இத்தகைய வகைகளில் நாட்டின் செல்வம் எவ்வாறு விரையம் செய்யப்படுகின்றதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! ஆனால் இன்று நாட்டில் நடமாடும் உயிருள்ள தெய்வங்கட்கு யாதேனும் நன்மை உண்டாவதற்கான வழிகளில் செலவிட இம் முதலாளித் தன்மைகொண்ட வன்நெஞ்சர்களின் மனதிறங்குகிறதாவெனப் பார்ப்போமானால் அதுதான் குதிரைக்கொம்பாகவிருக்கின்றது. தவிர முதலாளி, ஜமீன்தார், மிராசுதார், சிற்றரசர் என்ற தாம் உயர்ந்த அந்தஸ்துடையவர்களெனக் கருதிக்கொண்டிருக்கும் இத்தகைய பேதா பேதங்களை அறவே ஒழித்து சகல மக்களும் சமம் நாட்டின் செல்வமனைத்தும் சகல மக்களுக்கும் உறித்தானது நாட்டிலுண்டாகும் நன்மைதீமைகளும் இன்பத் துன்பங்களும் யாவரும் சரிசமத்துவமாக அடையவேண்டுமெனச் சொல்லும் சுயமரியாதைக்காரர்களிடம் என்ன குற்றஞ் சொல்ல முடியுமென்று கேட்கின்றேன்.

மேலும் நம் இந்தியாவிலுள்ள கோவில்களிலெல்லாம் இருக்கும் தங்கத்தைக் கணக்கெடுத்தால் 400 கோடி ரூபாய் பெறுமெனவும் தெரியவருகிறது. நம் நாட்டில் கல்வி முறையைப் பார்த்தால் மேல் நாட்டில் 100 க்கு 98 படித்திருக்க அண்மையிலுள்ள ஜப்பானில் 100க்கு 80 படித்திருக்க கல்விக்கி அரசித்தெய்வமாக சரஸ்வதியைக் கற்பித்து வணங்கிவரும் நம் இந்தியாவிலே 100 க்கு 15 தான்என்றால்இந்திய மக்களின் முட்டாள்தனத்திற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும், மீதமுள்ள 100 க்கு 85 பெயர்களின் நிலைமையாதெனில் கல்வி பயில வசதியில்லாதவர்களும் வசதியிருந்தும் படிக்கவைக்காத குறையுமேமலிந்து தோன்றுவதைக் காணக்கூடும். இவ்வாறாகக் கல்வி விஷயத்தில் கீழ் நோக்கிக்கொண்டிருக்கும் நம் நாட்டில் குறைவில்லாத கோவில்களைக் கல்விச் சாலைகளாகவும் அதில் புதைந்துகிடக்கும் 400 கோடி பெறுமானமுள்ள தங்கத்தையும் அதன் சொத்துக்களையும் கட்டாயக் கல்வி பயில உதவும்பொருட்டு உபயோகப்படுத்தவும் வேண்டுமெனச் சொல்லும் சுயமரியாதைக்காரர்களிடம் யாதேதேனும் குறையுண்டா?

தவிர நேற்று மாண்டுமடிந்து கிடந்த சுயராஜ்பக்ககூலிக்குஇன்று தோழர் காந்தியாரின் உயிர்ப்பிச்சையால் புத்துயிர்பெற்றுநாட்டில் செத்தபாம்பு தலைஎடுத்தாடுவதுபோல பத்திரிகைகளில் படாடோபப்படுத்தப்பட்டு வருவதுடன் இக்கூலிக்குத்தலைகளாகத் தோன்றியுள்ள சுயநலக் கூட்டங்கள் ஊர் ஊராகச் சென்று ஏதோ நாட்டுக்கு என்றுமில்லாத நன்மை செய்துவிடப் போகிறதாகவும், சுயராஜ்யத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்துவிடுவதாகவும் பல பல் பல்லவிகளில் பாடி தாம் கட்சியை பலப்படுத்திக்கொள்ள பரபரப்பாகத் திரிகின்றார்களே. இவர்களின் லக்ஷ்யம் என்ன? திட்டம்யாது? என யாராவது இக கூட்டத்தினர்களில் தெரியப்படுத்தி இருக்கிறார்களா? அவைகளை முதலில் தெரிந்துகொள்ள அவரவர்களின் பகுத்தறிவைக் கைக்கொள்ளுங்கள். பின் அவர்களின் தன்னலச் சூழ்ச்சிதானே வெளிப்பட்டு விடும். சாதாரணமாக இன்று நம் நாட்டில் காணப்படும் 600 சுதேச சமஸ்தானங்களென்ன, 2,300 பிரபல ஜாதியென்ன, 222 முக்கிய பாஷையென்ன 8 பெரிய மதங்களென்ன எட்டுக்கோடி தீண்டாதவர்களென்ன 100க்கு 2 முதலாளிகளென்ன இத்தனையும் இருந்தவாறு இருக்க வேண்டுமாம் வர்ணாச்சிரமதர்மம் குறைவுறாது நடைபெற வேண்டுமாம். நாடும் விடுதலையடைய வேண்டுமாம். என்னே இவர்களின் கூற்று சுதேச ராஜ்யங்களின் ஊழல்களைச் சொல்ல வேண்டுவதில்லை. மதத்துக்கு மக்கள் இறையாவது கணக்கிலடங்கா ஜாதிக்கு ஜாதி நடைபெறும் சண்டை எண்ணித்தொலையா பாஷைக்குப் பாஷை முழுத்துப்போட்டிகள். முதலாளி தொழிலாளிகளை நசுக்கி அடிமைப்படுத்தும் அக்கிரமங்கள் இன்னோரன்ன பல நாட்டில் மலிந்து தோன்றும் பொழுது அவைகளையெல்லாம் பார்த்தும் பாராத குருடர்களென்பதா? அறிந்தும் அறியாத பேடிகளென்பதா? பட்டும் திருந்தாத பதர்களென்பதா? என விளங்கவில்லை. எவை எக்கேடு கெட்டால் என்ன சுயநலமே பெரிதென என்னும் இச் சுயராஜ்யக் கூட்டத்தார்கட்கு அவர்களின் காரியத்திலே கண்ணாகவிருப்பார்களென்பது முற்றிலும் உண்மையாகும். சுயராஜ்யக்கட்சியின் தென்னாட்டுத்தலைவராகிய சத்தியமூர்த்தியைப் போன்றவர்கள் எதிலும் பட்டுக்கொள்ளாத விதமாகப்பேசும் பசப்பு வார்த்தையிலும் குருட்டுப் போக்கிலும் மதிமயங்கி உங்கள் பகுத்தறிவை இழந்துவிடாதேயுங்களென எச்சரிக்கைசெய்யவேண்டியதும் சுயமரியாதைக்காரர்களின் கடமையாகும். வீறுகப்பாமரமக்களைக் காட்டிக்கொடுத்து இச் சுயநலப் பார்ப்பனர்கள் மட்டிலும் பதவி வேட்டையாடத் துணிந்துவிட்டார்கள். ஏமாறாதீர்கள். ஏமாறாதீர்கள்,

---

## மதிப்புரை

நாகர் கோவிலின்று அன்பர் பி. சுப்பிரமண்யபிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு "தமிழன்" என்னும் ஆங்கில தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று கிடைக்கப் பெற்றோம்.

இப்பத்திரிகை பெரும்பாலும் திருவாங்கூர் தமிழர்களின் முன்னேற்றத்திற்கே பெரிதும் உழைக்கும் என்றாலும் சமய சமூக சீர்திருத்தத்துறையிற் மிக முற்போக்குடையதாய் மக்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான அரியதொண்டுகளை அஞ்சாது புரியுமென்று அதன் 1, 2 மலர்களினின்று விளங்குகின்றன. எனவே திருவாங்கூர் தமிழர்கள் மட்டுமல்ல எல்லாத் தமிழர்களும் இதை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதன் வருட சந்தா ரூ. 3

வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

மானேஜர்
தமிழன் ஆபீஸ்
கேப்ரோடு
நாகர்கோவில்

---

**மத உணர்ச்சியை ஒழிப்பது கடவுள் உணர்ச்சியை ஒழிப்பதாகும்.**

# டிரேட் யூனியன்கள்.

## அதன் தோற்றமும் வளர்ச்சியும்.

(காலஞ்சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ)

டிரேட் யூனியன்கள் என்றால் என்ன? அவை ஏன் ஏற்பட்டன? என்று பலர் கேட்கக்கூடும். சகஜமாக கூலிக்காரன் ஒருவன் காலையிலிருந்து மாலைவரையில் வேலை செய்ய கூலி நிர்ணயிக்கும் பொழுது நாம் அவன் அதிக கூலி கேட்டால் "நீ குறைந்த கூலிக்கு வேலை செய்ய இஷ்டப்படாமல் போனால் மற்றவர்கள் வேலை செய்ய தயாராகவிருக்கின்றனர்" என்று சொல்லி அவனை மிரட்டி குறைந்த கூலிக்கு வேலை செய்யச் சொல்கிறோமல்லவா? அவனைப்போல் மற்றும் பலர் அவனுடன் வேலைக்கு போட்டி போடுவதால் அவன் கூலி குறைகின்றது. ட்ரேட் யூனியன்கள் என்பது கூலிக்காரர்கள் ஒன்று சேர்ந்து நியாயமான கூலிக்கும், நியாயமான நேரம் வேலை செய்வதற்கும் வசதிகளை அடைய தங்களாலியன்றஅளவு வேலையை நிறுத்தியோ மற்ற எவ்வாறோ ஏற்பாடு செய்துகொள்வது தான். முதலாளி ஒவ்வொரு கூலிக்காரனிடமும் அதிக வேலை வாங்கவும் அவனுக்கு குறைந்த கூலியைக் கொடுக்கவும் முயல்கின்றான். கூலியாளும் முதலாளியைப் போலவே அதிகக்கூலியையும் குறைந்த வேலையையும் செய்யத்தான் தயாராகவிருக்கின்றான்.

ஆதலால் கூலியாட்கள் ஒன்று சேர்ந்தால்தான் கூலியாட்களுக்குள்ளேயே ஒருவருடன் ஒருவர் போட்டி போடாமலிருக்க முடியும். இங்கிலாந்தில் கரிசுரங்கங்களில் வேலை செய்தவர்களும், மத்திய பிரதேசங்களில் இரும்பையும், ஈயத்தையும் காச்சி சாமான்களாக வார்த்த கூலி ஆட்களும், பருத்தி ஆலைகளில்வேலை செய்த லங்காஷயர் கூலி ஆள்களும் இன்னும் இவர்களைப் போன்ற சில கூலிகளே ஒன்று சேர்ந்து ட்ரேட் யூனியன்களை ஸ்தாபித்துக்கொண்டனர். விவசாயக்கூலிகள் தேசமுழுவதும் பரவி இருந்ததால் அவர்களுக்குள் வெகுகாலம் வரையில் ட்ரேட்யூனியன்கள்கிடையாது. பணக்காரர் வீடுகளில் வேலை செய்யும் சேவகர்கள், சமயல்காரிகள், பெரிய டவுன்களில் வீட்டிலேயேயிருந்துகொண்டு வேலை செய்யும் தையல்காரர்கள், ஜரிகை வேலை செய்யும் சிறுமிகள்இன்னும் அனேகவித வேலையாள்கள் ட்ரேட்யூனியன்கள் ஏற்படுத்திக்கொள்ளவே முடியவில்லை.

ட்ரேட் யூனியன்கள் ஏற்படுத்திக்கொண்டால் முதல்முதலாக "நீ வேலைசெய்யாவிட்டால்மற்றொருவன் வேலை செய்ய தயாராக விருக்கிறான்" என்று எஜமான் சொல்லமாட்டான். இரண்டாவதாக யூனியனில் எல்லோரும் சேர்ந்தால் மாதாமாதம் சிறிது பணத்தை சேகரித்து கூலியை உயர்த்தவோ அல்லது மணிக்கணக்கை குறைக்கவோ முயலலாம். அபாயகரமான கட்டிடங்களிலாவது மெஷினருகிலாவது, அல்லது துர்நாற்றம் வீசுமிடத்திலாவது வேலை செய்யவோ மறுக்கலாம்.

முதலில் யூனியன்கள் ஏற்பட்டவுடன் முதலாளிகள் இங்கிலாந்தில் பார்லிமெண்டின் மூலம் இந்த யூனியன்களெல்லாம் சட்டவிரோத மென்று ஸ்தாபித்தனர். யூனியன்களெல்லாம் கக்ஷ சூழ்ச்சி (Conspiracy) களென்று சட்டமேற்படுத்தப்பட்டது. ஆனால் கூலி ஆட்களின் தைரியம்குன்றவில்லை. யூனியன்கள் சட்டவிரோதமான ஸ்தாபனங்களாகக் கருதப்பட்டபோதிலும் யூனியன்கள் ஒருவருக்கும் தெரியாமல காரியங்களை நடத்தின. பின்பு கவர்ண்மெண்டார் இந்த சட்டத்தை மாற்றினர்.

பின்பு முதலாளிகள் யூனியன்களில் வேலைசெய்து வரும் முக்யஸ்தர்களையும் யூனியன்களில் சேர்பவரையும் வேலையில் அமர்த்திக்கொள்ள மறுத்தனர். யூனியன்களை ரெகக்னைஸ் (Recogniser) செய்ய மறுக்கவும் ஆரம்பித்தனர். இதுவும் கூட பலிக்காமல் போய்விட்டது. இந்தியாவில் சற்றும் தூரதிருஷ்டியில்லாத முதலாளிகள் இப்படித்தான் அனேக யூனியன்களை கஷ்டப்படுத்துகின்றனர். அதுமேல் மேலும் துவேஷத்தை வளர்க்குமேயன்றி நன்மையைச் சிறிதும் செய்வதில்லை. ரெகக்னைஸ் செய்வதால் முதலாளிக்கு வீண்கஷ்டமும், அநாவசியமான தொல்லையும் குறையும். யூனியனில் செக்ரடரியாகவோ பிரசிடெண்டாகவோவிருப்பவர் அந்தந்த தொழிலின் நுட்பங்களைநன்கறிந்தவராகத்தானிருப்பர். அவருடன் சீக்கிரம் கூலியைப்பற்றியும், வேலை மணிகளைப்பற்றியும் பேசுவ சுலபம். ஒவ்வொரு தொழிலாளியுடனும் தனித்தனியே இதைப் பேசிமுடிப்பது போல் தொல்லையான வியாபாரம் கிடையாது.

கூலியில் இரண்டு விதமான கூலியுண்டு. நாள் கூலியென்றும், வேலைக்கூலியென்றும் அவைகளை சொல்லலாம். நாள்கூலி யென்றால் ஒருநாளைக்கு எட்டு மணியோ பத்து மணியோ வேலைசெய்வதற்கு பணக்கூலி. வேலைக்கூலி என்றால் இருபது முழும் நெய்வதற்கோ, ஆயிரம் செங்கலறுப்பதற்கோ, நான்கு நாற்காலிகள் செய்வதற்கோ ஒரு பணக்கூலி. சாதாரணமாக நாம் நான் கூலிவாங்க கூலிக்காரனிஷ்டப்படுவானென்றும், வேலைக்கூலி கொடுக்க எஜமானனிஷ்டப்படுவானென்று நினைப்போம். ஏனெனில் கூலிக்காரன் நாள் கூலியாகவிருந்தால் அவசரப்படாமலும், மிகவும் கஷ்டப்படாமலும் ஏற்படுத்தியிருக்கும் பொழுதை கழிக்க முயலுவானென்றும், முதலாளி வேலைக்கூலியாகவிருந்தால் மேம்பார்வையே இடாமலிருக்கமுடியுமென்றும் யோசிப்பானென்று நினைக்கலாம். ஆனால் அனேகமாக கூலிக்காரன் வேலைக்கூலிவாங்கத்தானிஷ்டப்படுகிறான். நாள் கூலியாகவிருந்தால் புதியமெஷின் ஏற்படுத்தப்பட்டால் கூட தான் பழயகூலியைத்தான் வாங்க வேண்டியிருக்குமென்றுதான் இந்த புதிய மெஷின் அவன் முன் செய்த வேலைக்கே பன்மடங்காக துணியை நெய்கின்றதென்றால் இந்த அதிக லாபத்தில் தனக்கொரு பாகமுமில்லாமற்போவதை ஒப்புக்கொள்ளமாட்டான். வேலைக்காரன் தினம் தினம் புதியபுதியஇயந்திரங்களை நிபுணர்கள் செய்ய முயல்கின்றார்களென்று தெரிந்துதானிப்படி நடந்து கொள்கிறான் என்பதற்கு சந்தேகமில்லை.

சாதாரணமாக விலைவாசிகள்ஏறும் சமயங்களில் கூலிக்காரர்கள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடாக வேலை நிறுத்துவது சகஜம். ஏனெனில் அனேகமாக பணக்கூலியாகவிருப்பதால் விலைகள் ஏறும் சமயத்தில் கூலிக்காரன், தான் வாங்கக்கூடிய சாமான்கள் குறைவதைக்கண்டு கூலி அதிகமாகக் கேட்கின்றான். முதலாளிகள் தாங்கள் விற்கும் சாமான்கள் விலை ஏறுவதால் அனேகமாக அதிககூலி கொடுக்க சம்மதிப்பது வழக்கம். அது அவர்களுக்கு அச்சமயத்தில் பெரும்பாலும் லாபகரமாகவே இருக்கும். விலைவாசிகள் குறையும்பொழுது எஜமான்களாகவே கூலியாட்களுக்குப்பழைய கூலி கொடுப்பது கட்டாமல் தொழிற்சாலைகளை சாத்துவதும் சகஜம். சென்ற நான்கு வருடங்களாக எங்கும் இந்த சம்பவத்தை நாம் பார்க்கின்றோம்,

இங்கிலாந்தில் சென்ற முப்பது வருடங்களாகத்தான் ட்ரேட்யூனியன்கள் பலமடைந்து ஓங்கிவளர்ந்தன. ஆனால் அதற்கு முன்பே முக்கியமான தொழிற்சாலை சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பது சரித்திர சமாசாரம். அது எப்படி என்று பலர் கேட்கக்கூடும். இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் தேசத்தை ஆண்டுவந்தவர்களும் இங்கிலீஷ் கிராமங்களில் வசித்த பெரிய மிராசுதாரர்கள் இங்கிலாந்தில் வியாபாரமும், கைத்தொழிலும் தற்பொழுது போல் போற்றப்படவில்லை. வியாபாரத்திலோ கைத்தொழிலிலோ ஒருவன் பணக்காரனானால் மிராசுதார்கள் அவனை புதுப்பணக்காரன் என்று சற்று அவமதிப்பது வழக்கம்.பரம்பரை பணக்காரர்கள் புதிய பணக்காரர்களை தங்களுடைய கூட்டங்களில் வரவேற்பது இந்தியாவில் கூடத்தான் கிடையாது. அதுகாரணம்பற்றி வியாபாரிகளுக்கும் மிராசுதார்களுக்கும் ஒரு பெரும் போட்டி ஏற்பட்டது.

மிராசுதார்களுக்கு பார்லிமெண்ட் சபையில் அதிக ஆதிக்கமிருந்து வந்தது.அதை வியாபாரிகளும் தொழிற்சாலை சொந்தக்காரர்களும் குறைக்க எண்ணி மிராசுதார்கள் அநியாயங்களை பட்டவர்தனமாக ஜனங்களுக்கு எடுத்துரைக்க ஆரம்பித்தனர் பர்மிங்ஹாமும், மான்சஸ்டரும் பார்லிமெண்ட் சபையில் பிரதிநிதிகளில்லாமலிருப்பதையும், இரண்டு குடிசைகளும் ஒரு பெரிய மனிதர் வீடுமடங்கிய சில கிராமங்கள் பார்லிமெண்ட் சபைக்கு இரண்டு மெம்பர்களை நியமிப்பதையும் எடுத்துக் காட்டினர். மிராசுதார்கள் ஆடுகளையும், மாடுகளையும் வளர்க்க குடும்பங்களை தேசத்தைவிட்டு துரத்தினதையும், முயல்களையும் பக்ஷிகளையும் ஏழைகள் சுட்டுகின்றதற்காக அவர்களை ஜயிலுக்கு அனுப்பியதையும், மிராசுதார்கள் பூமிகளை உழுதுவந்த குடியானவர்களுக்கு சரியான கூலியாவது, வசிக்கக்கூடிய குடிசையாவது ஏற்படுத்தாமலிருப்பதைப் பற்றியும், தங்கள் மதத்தையும் தங்கள் மததத்துவங்களையும் ஒப்புக்கொள்ளாதவர்களை துன்பப்படுத்தினதையும், மிராசுதார்களுக்கு வோட் செய்யாத சிறு கடைக்காரர்களை பஹிஷ்காரம் செய்ததையும் எடுத்துக் காட்டினர்.

மிராசுதார்களுக்குமிகுந்த கோபம் வந்தது. இந்த புதுபணக்காரர்கள் கொழுப்பை அடக்க அவர்கள் லார்டு (Shafter bury) ஷாப்டர் பரி என்ற கனவானுடன் சேர்ந்து பல தொழிற் சாலை சட்டங்களை பார்லிமெண்டில் நிறைவேற்றினார்கள். பட்டணங்களில் வேலை செய்யும் கூலி ஆள்கள் மேற்கு இந்தீஸ் (West Indies) வேலை செய்யும் அடிமைகளைவிட கஷ்டப்படுகிறார்களென்றும், அவர்கள் நல்ல காற்றில்லாத இடங்களில் அடைக்கப்படுகிறார்களென்றும், அவர்களுடைய கால், கை, வேகமாக சுற்றும் எந்திரங்களில் அகப்படாமல் சரியான கட்டிடங்கள் கட்டப்படவேண்டுமென்றும், ட்ரேட் யூனியன் தலைவர்களை இந்த புதுப் பணக்காரர்கள் மிகவும் வருத்துகிறார்களென்றும், குழந்தைகளையும் பெண்களையும் அதிகநேரம் சுரங்கங்களி

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

# சைவத்திற்கு சாவுமணி.

## கோவை சைவ சித்தாந்த சபையில் சுயமரியாதை முழக்கம்.

## சி. கே. சுப்ரமண்ய முதலியார் கொட்டம் ஒடுங்கிற்று.

:O:

29.4.34ல் 4-30 மணிக்கு
கோயம்புத்தூரில் "கோவைபேட்
டை ஈஸ்வரன் கோவில் ஸ்ரீவிசா
லாட்சி அம்பிகை சைவசித்தாந்த
சபை" என்ற ஓர் சங்கம் நிறுவ
டிகோவிலில் திரு சி. கே. சுப்ர
மண்யமுதலியார் பி. ஏ. தலைமை
யின் கீழ் கூடியது. தலைவர் முன்
னுரையாக உலகத்திலுள்ள
எல்லாதேசங்களும், எல்லா சமூக
ங்களும் சமயத்தை அடிப்படை
யாகக்கொண்டிருக்கின்றன வென்
றும், ஆனால் ரஷ்யா தேசம்ஒன்று
மட்டும் ஆஸ்திகத்தை வெறுத்து
நாஸ்திகத்தை ஆதரிக்கிறதென்
றும், அதைப்பற்றி நமக்கு கவலை
இல்லைஎன்றும் சைவசித்தாந்தமே
உலகத்திலுள்ள எல்லாச்சமயங்
களிலும் சிறந்தது என்றும், அது
மதங்களெல்லாவற்றிற்கும் கிரீட
ம் போன்றது என்றும், உயர்ந்த
தத்துவங்களைக் கொண்டது என்
றும், அதை ஆதரிப்பார் தொகை
படிப்பார்தொகை அருகி வருகிற
தென்றும் சைவர்கள் சைவ சமய
வளர்ச்சியைப்பற்றி கவலைகொள்வ
தில்லைஎன்றும், சைவ சித்தாந்த
த்தை வளர்க்க இத்தகைய சபை
கள் அவசியம் வேண்டற்பாலது
என்றும் இக்கோயிலிலே சைவ
சமய நூற்களைத்திரட்டி ஒருநூல்
நிலையம ஏற்படுத்தவேண்டு மென்
றும் சைவர்கள் அதை படியாவிடி
னும் கண்ணாடி பீரோக்களில்
உயர்ந்த கில்ட் எழுத்துகளுடன்
இருக்கும் நூல்களைப்பார்த்து சை
வசித்தாந்தநூல்களின் பெயர்களை
யாவது தெரிந்து கொள்வார்கள்
என்றும் பேசி முடித்தார். அதன்
பின்னர் முனிசிபல் ஹைஸ்கூல் த
மிழ்பண்டிதர் திரு. சொக்கலிங்கம்
பிள்ளையும் திரு ஆனையப்ப முத
லியாரும் தலைவர் உரையை ஆத
ரித்துப்பேசிய பின்னர் சங்கஉத்தி
யோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்ப
ட்டது. அப்பொழுது திரு. அ.
இராகவன் சைவம் என்னும்
பொருள்பற்றி தனக்கு சிறிது
நேரம் பேசுவதற்கு இடம் வேண்
டுமெனதலைவருக்குஒருசீட்டு அனு
ப்பினர். பேசுவதற்கு இடமளிக்
கமுடியாதுஎன்றும், தலைவர் அவசர
காரியமாக ஓரிடத்துக்கு போக
வேண்டிய திருக்கிறது என்றும்
மணியழகு மாணிக்க சுந்தரம்
செட்டியார் கூறினர். உடனே
கூட்டத்திலுள்ளோர் தலைவர்
இடமளிக்கவேண்டும் என்றும்
இடமளிக்க முடியும் அல்லது
முடியாது என்று தலைவரே சொ
ல்லட்டும் என்றும் கூப்பாடு
போட்டார்கள். தலைவர் எழுந்து
கூட்டத்தை சமாதானப்படுத்தி
திரு இராகவனை 5 நிமிஷம் பேச
இடமளித்திருப்பதாக கூறினர்.
இராகவன் பேச ஆரம்பித்தார்.
அதன்சாரம் பின்வருமாறு:—

சைவசமயத்திலே நான்பிறந்து
வளர்ந்தவன்தான் கொஞ்சம்சைவ
நூற்களையும் பயின்றிருக்கிறேன்
பலசைவபண்டிதர்களிடம்சித்தாந்
தப்பாடம் கேட்டிருக்கிறேன்.
ஆனால் நான் அறிந்த அளவில்
சைவத்தை ஓர்ஆஸ்திகசமயமென்
றுகூறிவிட முடியாது. ஆஸ்திகத்தி
ன் அடிப்படையை சைவம் அறு
த்தெறிகிறது, தெளிவாய்கூறினால்
சைவம் ஒரு நாஸ்திக நெறியே. இ
வ்விஷயம் சாதாரணமாக சைவம
க்களென்றுகூறிக்கொள்ளும்பாமர
மக்களுக்கு தெரிவதில்லை. ஏனெ
னில் சைவர்கள் தங்கள் கோவி
லென்று கூறிக்கொள்ளும் பார்ப்
பன அக்ராகார மாகிடதற்கால
ய ஆலயங்களில் நூற்றுக்கணக்
கான கல் செம்பு பதுமைகளை
வைத்து கடவுள் கடவுள் என்று
கூறிக்கொள்வதினாலும் சைவ
சித்தாந்த நூற்கள் சாதாரண
மக்கள் படிக்கமுடியாத பரிபாசை
களில் எழுதப்பட்டிருப்பதினாலும்
சைவம் ஆஸ்திக சமயம் என்று
நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
சைவ சித்தாந்தத்தின் அடிப்படை
முப்பொருள் உண்மையையாகும்
அதாவதுபதி, பசு, பாசம் உண்மை
என்பதேயாகும். இதன்கருத்து
என்னவென்றால் கடவுள் உயிர்
மாய்கை எனும் மூன்று என்றும்
நிலையாக உள்ளது என்றும் சிவ
பெருமான் உயிர்கள் மேல்கருணை
வைத்து அவ்வுயிர்களை தன்னோடு
சேர்த்துக்கொள்ளக்கருதி இவ்வு
டலைக்கொடுத்து உலகில் உயிர்க
ளாகப் பரிணமிக்கச்செய்தான்
என்பதே. உயிரானது
கடவுளால் உண்டாக்கப்படவில்லை
சைவசித்தாந்தத்தின்
கொள்கை என்பது நன்கு புலப்ப
டும் தாய் தகப்பனின் சேர்க்கை
யால் உடலானது உண்டாகிறது
என்பது நமது அனுபவத்தில்
காணும் உண்மையாகும்.
கடவுள் உயிரை உண்டாக்கினான்
என்பதே பிறமதஸ்தர் கடவுளு
க்குக் கூறும் சிறப்பு. அச் சிறப்
பையும் சைவம் கடவுளுக்குக்
கொடுக்கவில்லை. கடவுள் உயி
ரையும் உண்டாக்க வில்லையென்
றால் கடவுள் எதற்கு வேண்டும்.
அது இருந்து தான் என்ன பிர
யோசனம். ஸ்மார்த்தர்கள் பிரம
மே மாயா சம்மந்தப்பட்டு இவ்வு
லக உயிரினங்களாகத் தோன்றி
யிருக்கிறது. என்று கூறும் ஏகா
ன்ம வாதிகளாகிய பார்ப்பனர்
களை சைவர்கள் 'தானே கடவுளெ
ன்றிடும் பாதகத்தவர்' என்றும்
இவர்கள் ஒருவகை நாஸ்திகர்
என்றும் நவில்பர். ஆனால் இச்
சைவர்கள் ஆஸ்திகர்கள் என்று
கூறிக்கொள்ள அவர்கள் மத
நூல் ஒரு சிறிதும் இடங்கொடுக்க
வில்லை.

சைவத்திற்கு ஓர் ஸ்திரமான
கொள்கையோ வேதமோ ஒன்
றும் கிடையாது. ஓர் சைவப்
பண்டிதர் இருக்கு, யஜுர், சா
மம், அதர்வணம் எனும் நாலும்
சைவர்களின் வேதம் என்பார்
மற்றொரு பண்டிதர் தேவாரம்
தான் எங்கள் வேதம் என்பார்
இன்னொருவர் தேவாரம் திருவா
சம் என்பார், மற்றொரு பண்டிதர்
தேவார திருவாசகம் திருக்குறள்
திருமந்திரம் என்பார். பிறிதொ
ருவர் சைவர்களின் திருமறையை
க்கடல்கொண்டு போயிற்று என்
பார். இவ்வாறே தந்தையை
அறியாத தனயர்கள் போல் விழி
த்துக்கொண்டிருப்பார். எங்கள்
திருநெல்வேலி ஜில்லா சம்மந்தப்ப
ட்ட மட்டில் வேளாளர் தான்
சைவர் என்று கூறிக்கொள்ள
முடியும் பார்ப்பானைக் கூட சைவ
வர்கள் என்று கூறிக்கொள்ள
முடியாது ஏனைய ஜாதிக்காரர்கள்
தாங்கள் புலால் தின்னாதவர்களா
யினும் சிவ தீக்கை பெற்றவர்க
ளாயினும் சைவத்திற் கூறப்ப
ட்ட சைவரின்இலக்கணம்முழுது
ம் உடையோனாயினும்அவன் சை
வன் என்று நினைக்கவே முடி
யாது. கொங்கு நாட்டிலுள்ள வே
ளாளன் சைவன் என்று சொன்
னால் கண்டிப்பாய் அவமானப்பட்
டே வந்து சேர்வான். சைவ சமய
த்தைக் கசடறக்கற்றுஅச் சமயத்
திற்கு ஒரு பெரும் தூண் போ
ன்று விளங்கும் சுவாமி வேதாச
லம் அவர்களையே சைவராகச் சே
ர்த்துக்கொள்ள ஒருப்படவில்லை
யென்றால் மற்றவர்களைப்
பற்றி என்ன நினைப்பார்கள்
என்று நீங்களே யோஜித்துக்கொ
ள்ளுங்கள். திரு சச்சிதானந்தம்
பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்க
ளிடம் சாப்பாட்டு விஷயத்தில்
நடந்துகொண்ட நேர்மையைச்
சொல்லவும் வேண்டுமோ?

நமது முதலியாரின் சைவம்
வேறு, காலஞ்சென்ற சுவாமி
நாத பண்டிதரின் சைவம்
வேறு சுவாமி வேதாசலம் சை
வம் வேறு, திரு. வி கல்யாண சுந்
தர முதலியார்சைவம்வேறு திரு
கா. சுப்பிரமண்ய பிள்ளை, சுவாமி
வேதாசலம் போன்ற சைவப்
பண்டிதர்கள் ஆதித்திராவிடர்க
ளுக்கு ஆலயப் பிரவேசம் அளி
க்க வேண்டும் என்றும் சைவம்
ஜாதி பேதத்தை ஒழிக்க வந்த
செந்நெறி யென்றும் செப்புகின்
றார்கள். ஆனால்நமது சி. கே. சுப்பி
ரமண்ய முதலியார் அவர்கள் ஆதி
திராவிடருக்கு ஆலயப்பிரவேசம்
அளிக்கக் கூடாதெனகூறியதாகப்
பத்திரிகையில் படித்தேன். அதை
க்கேட்டு எனது ரத்தம் கொதிக்
கிறது. வைதீகப்பார்ப்பானும்
தைரியமாக வந்து ஆதித்திராவிட
ருக்கு ஆலயப் பிரவேசம அளிப்
பது கூடாது என்று பகிரங்க
மாய்ப் பிரசங்கஞ் செய்ய முடியா
திருக்கும் இக்காலத்தில் பிராமண
ரல்லாதசமூகத்திலுதித்தஒரு தலை
வன் இவ்வாறு கூறியது பிராமண
ரல்லாத சமூகத்திற்கே பெரும்
அவமானம். நான் இப்பொழுது
ஓர் மதமற்றவனாயிருப்பினும்
திரு முதலியாரைப் போன்ற
கொள்கையுடைய போலிகளையு
டைய ஓர் மதயிலே பிறந்ததற்
காக வெட்க முறுகிறேன்.
சைவம் உலகத்திலே சிறந்த மத
மென்று முதலியார்கூறினர். ஒவ்
வொரு மதஸ்தரும் இவ்வாறே
தான் கூறுகின்றார்கள். பிற மத
ஸ்தர்களைவிட சைவம் உயர்ந்த
தென்று திரு. முதலியார் கூறமு
ன்வந்தது பெரும் வேடிக்கையாக

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# பெற்றோர் கொடுமையும், பெண்களின் நிலைமையும்.

ஈரோடு கருங்கல்பாளையம் 18வது ஆண்டுவிழாவில் 13வயது எல். சென்னியம்மாள் நிகழ்த்திய பிரசங்கம் வருமாறு:—

சபையோர்களே! பெரியோர்களே! சகோதர சகோதரிகளே!

இன்று நான் பேசப்போகும் பொருள் பெற்றோர் கொடுமையும், பெண்கள் நிலைமையும்.

அதாவது, பெண்ணின் பெற்றோர்களே பெண்ணைக் கொடுமைப் படுத்தினுல் மற்றவர்கள் என் கொடுமை செய்யமாட்டார்கள். பத்து மாதம் சுமந்து ஆண்களைப் பெற்றது போலவே பெண்களைப் பெற்றதாய் பெண்ணை நிந்தித்து சலிப்படைந்து விடுகிறார்கள். இது ஓர் புறம் இருக்கப் பெண்ணினுடைய சட்டங்களையும், வேலைத்திட்டங்களையும், கட்டுப்பாடுகளையும், அடிமைத்தனங்களையும், கவனித்துப் பார்க்கும்பொழுது பெண் பிறந்து 5 வயது ஆகிவிட்டாலோ கூட்டிவாறும் வேலையைக் கற்பிக்கிறார்கள். அது கற்காவிட்டால் பெண்களுக்கு அழகில்லையாம். அதற்காகப் பெற்றோர்கள் அதை அடித்துத் திருத்திக் கொடுக்கிறார்கள். உடனே பாத்திரம் துலக்கவும் சட்டி சுரண்டவும் கற்க வேண்டுமாம். அப்படிக் கற்றுக் கொள்ளாவிடில் மாமியார் வீட்டிற்குப் போனுல் படிந்து வேலை செய்யமாட்டார்களாம். அதற்கு ஓர் பழமொழி சிம்பில் வளையாது கொம்பில் வளையுமா அதற்குத்தான் சின்ன வயதிலே கற்பிக்க வேண்டுமென்று சொல்லி பெண்களைக் கல்வியில் பயிலாமல்அடுப்பூதும்பெண்களுக்குப் படிப்பு என்னத்திற்கு என்று பெண்களை முட்டாள்களாகவும், அடிமையாகவும் நடத்துகிறார்கள். என்ன கொடுமை 9, 10 வயது ஆகி விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை அடுப்பூதும் தொழில் கற்றுக் கொண்டுபோல் ஆகி விடுவதுதான். உடனே பந்துக்களெல்லாம் கூடி சர்டிபிகேட் தந்துவிடுவார்கள். ஆ, இந்தப்பெண் சமையலில் கெட்டிக்காரி என்று ஊர் பூராவும் விளம்பரப்படுத்தி விடுவார்கள். இந்தப் பரிட்சையில் பாஸ் ஆகாமல் பெயிலாய் போய்விட்டாலோ அதை விடக் குறைவு வேறு இல்லை. அது கெட்டது மூதேவி அவளுக்கென்ன ஓர் வேலைகூடத் தெரியவில்லை முகத்தில் விழித்தால் கூட நமக்குத் தரித்திரம் வந்துவிடும் என்று தூஷணைகள் வாங்கிக் கொண்டு தான்சாக வேண்டும். 12, 13 வயது ஆகிவிட்டாலோ பெரிய ஜெயிலில் இருப்பது போலிருப்பது தான் பெண்ணுக்கு அழகு இல்லையா தாய் தந்தையருக்குச்மானம் வந்து ஆகாயத்தில் முட்டிக்கொள்ளுமாம். வீட்டில் அண்ணன் தம்பி மற்றுமுள்ள வாலிபப் பிள்ளைகளோடும் பேசக்கூடாது ஏதாவது விசேஷங்களுக்குப் போகக்கூடாது அப்படி மீறிப்போய் விட்டாலோ பெற்றதாய் பேசுவது காதில் ஈயம் காய்ச்சி ஊற்றினுல் எவ்வாறோ அவ்வாறு தான் அவருடைய நிலைமை. அடிபாவி என் பெயரைக் கெடுக்கவந்த மூதேவி நான் செய்த பாவமெல்லாம் ஓர் பிண்டமாக என் வயிற்றில் கடவுள் பிடித்துப் போட்டுவிட்டார் போலிருக்கிறது நல்ல மரத்தில் பில்லேரி பாய்ந்ததுபோல் நீ எங்கிருந்து எங்கள் குலத்தைக் கெடுக்கப் பிறந்தாயோ தெரியவில்லையே என்று நிந்தித்தும் அடித்தும் கட்டுப்படுத்தினுல் பெண்மணிகள் முன்னேற்றம் ஆவது எப்படி, இது தவிர கலியாணம் ஆகாமல் மேஜரான பெண்மணியின் நிலைமையைப்பற்றி இப்பேரவையின் கண் பேசுவதற்கு ஆரம்பிக்கும்பொழுது எனது மனம் தடுமாறுகின்றது நாவு குழறுகின்றது என்றாலும் எனது சிற்றறிவுக் கெட்டியவரையில் கூறி எனது உபன்யாசத்தை முடித்துக் கொள்ளுகிறேன். சபையோர்களே.

கலியாணம் ஆகாமல் பெண் மேஜராகி வீட்டிலிருந்தால் வீட்டிற்கு அண்ணன் தம்பி குலத்திற்கு ஆகாதாம் அது ஒரு புறம் இருக்க வாலிபப் புருஷர் கண்ணில் படக்கூடாதாம். பட்டால் அவளுக்குப் பதிவிரதா பங்கம் வந்துவிடுமாம் சாப்பாட்டு விஷயமே பெரும் மோசம். மத்தியானம் அரைச்சாப்பாடும் இராப்போஜனம் அறவே கூடாதாம். ஏனென்றால் புருஷன் இல்லாமலிருப்பதால் அகம் என்றும் ஒரு வஸ்து அவளிடத்தில் பலப்பட்டுப் போய்விட்டால் கெடுதியாம் அண்ணன் தம்பி என்று கூடப்பாராமல் ஆலிங்கனம் செய்யும்படி துன் புருத்துவார்களாம். ஆனதால் பெற்றோர்களே பெண்களின் பலத்தை அழித்து நாசம் செய்தால் நம் நாட்டுப் பெண்கள் அன்னியநாட்டுப் பெண்களைப் போல் முன்னேற்றம் அடைவது எப்படி என்றுதான் தெரியவில்லை. இது விஷயம் இப்படி இருக்கக்கலியாண விஷயத்தைப் பற்றி சிறிது ஆராய்ச்சிசெய்தாலோ எல்லாவற்றிலும் விட அதிகமான சட்டங்கள் ஏற்படுகிறது தாய் தகப்பன் பார்த்துப் பணத்துக்கு ஆசைப்பட்டு ஒரு நறைத்தகிழவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்குச்சம்மதித்தாலும், பெண் அதற்குக்கட்டுப்பட்டு மணம்செய்துகொண்டு அவனையே தெய்வமாகப்பாவித்து வணங்கி இல்லறம் நடத்தவேண்டுமாம். அவர்கள் ஒரு பாழுங்கிணற்றில் பிடித்துத் தள்ளினுலும் விழுந்தேயாகவேண்டுமாம் என்னே இவர்கள் மதியீனம்.

சபையோர்களே. இதுவிஷயம் இப்படியிருக்க. கல்யாணம் ஆன பெண்மணிகளின் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சிசெய்தாலோ. உலகத்திலுள்ள கொடுமை ஆண்கள் பெண்களுக்குச் செய்யும் கொடுமையென்று துணிந்துகூறுவேன், மனிதனை மிருகத்தன்மையிலிருந்து மனிதத்தன்மைக்குக் கொண்டுவருவது கல்வியேயாகும். ஆனல் இந்தத்தேசத்தில் மட்டும் பாழாய்ப் போன நம் தேசத்தில் மட்டும் பெண்கல்வி இன்னும் மறுக்கப்படுகிறது ஒருக்கால் உலக நாகரிகத்தில் வசப்பட்டுப் பெண்களும் சீர்திருத்த வாதிகளும் கிளர்ச்சி செய்தால் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்திற்கு என்று மூட்டாள் தனமாக வெட்டிப் பேச்சுப் பேசிக்குருட்டுத்தனமாய் எதிர்க்கிறார்கள், பெண்களுக்குப் படிப்புக் கொடாது அறிவைவளரவிடாது தடுத்து மிருகப் பிராயத்திலேயே வைக்கவிரும்பும் கொடுமையிலும் கொடுமை எங்குகாண முடியும்

ஆண்கள். காலையிலும் மாலையிலும் உல்லாசமாக உலாவச் செல்லுகிறார்கள் நல்லகாற்றுக் கிடைக்கின்றது இன்னும் பரந்த உலகத்தில் இன்பக் காட்சிகிடைக்கின்றது, ஆகவே மகிழ்ச்சியடைகின்றார்கள். ஆனல். பெண்களுக்கோ சிறிதுநேரம் போக்கவசதியான வாசகசாலையோ அல்லது நந்தவனமோ விளையாட்டிடமோ கிடையாது. சதாசர்வகாலமும் இருட்டறையில் அடைந்து கிடந்து பணிவிடைசெய்யவேண்டியதே அவள் கேட்டுவந்தவரமாம்மாட்டை அடித்து வசக்கித்தொழுவில் மாட்டுவதைப் போல ஆதிக்கவெறிபிடித்த ஆண்தன் பெண்களை வீட்டிற்குள் அடைக்கப்பட்டு அவதிப்பட்டு அழுந்துகிறார்கள். இது என்ன கொடுமை.

எவ்வளவு பெரியமழை பெய்தாலும் பெண்கள் கையில் குடைபிடிப்பதில்லை வீட்டுத்திண்ணை, தாழ்வாரம், கூடம் இதுகளில் ஆடு மாடுகள் ஒதுங்குவதுபோல ஒதுங்குகின்றார்கள். இல்லையேல் சேலை, முறம், தடுக்கு, முதலியவற்றைத்தலையில் தாங்கிச்செல்லுகிறார்கள். வெய்யிலின் கொடுமையால், அந்தோ, சூடு தாங்கமுடியாமல், நிழல் நிழலாய் நின்று புழுப்போல் துடிக்கின்றார்கள் இத்தகைய கஷ்டத்திலிருந்து விடுபட்ட ஆண்கள் பெண்களைத்துண்டவில்லை யென்று திட்டமாகச் சொல்லலாம் அதோடு பெண்களில் சிலர் துணிந்து மழைக்காகக் குடைபிடிக்கவும் சூடுபொருக்க முடியாமல், காலில் மிதியடியணியவும் செய்தால் ஆண்கள் எளனம்செய்[illegible] உலகமே மூழ்கிவிடுமென்று கூக்[illegible] விடுக்குதிக்கின்றார்கள். சபையோர்களே, குடையும் மிதியடியும் ஆண்களுக்குச் சொந்தச் சொத்தாவென்று நான் கேட்கிறேன். அல்லது இயற்கைச்சட்டத்தில், ஆண்களுக்கு மட்டுந்தான். குளிரும், சூடும். மழையும் வெய்யிலும். துன்பத்தைக் கொடுக்குமென்றிருக்கிறதா. இது எவ்வளவு அக்கிரமமென்பதை மனிதத் தன்மையோடு யோசித்துப் பாருங்கள்.

மாதவிடாய் நாட்களில் பெண்கள் படும் பாடு சொல்லிமுடியாது, அப்பெண்கள் அந்த நாள்களில் மக்களுக்குச் சமமாகவே மதிக்கப்படுவதில்லை ஆணுக்கொரு நீதி என்ன அநீதியிது. ஆண்கள் சாப்பிட்ட பிறகு தான் பெண்கள் சாப்பிடவேண்டுமாம் ஒவ்வொருகுடும்பத்திலும் ஐந்து வயது ஆண் குழந்தை வாவில்லையானலும் பெண்கள் காத்திருந்து கண்துங்கி வாடுகின்றார்கள். மனுமுதலியவர்கள் சொல்லுவது போல் பிர்ம்மா பெண்களை ஆண்களுக்கு அடிமையாகத்தான் படைத்தான் என்று வைத்துக்கொள்வோம். அம்மம்மா கொடுமை. கொடுமை இதனிலும் மிகக் கொடுமை புருஷன் எச்சிலைப்பெண்கள் தின்னவேண்டு மென்பதே புருஷன் எப்படித்தின்று போட்டிருந்தாலும்சரி அதைப்பற்றிக்கவலை இல்லை. எப்பொழுது பெண்களின் எச்சிலை ஆண்கள் சாப்பிட நேருகின்றதோ அன்று தான் ஆண்கள் இந்த அநியாயத்தை உணருவார்கள்.

வீட்டுக்குரிய கடினவேலைகளான தண்ணீரெடுத்தல், சமைத்தல், முதலியவற்றைச்செய்ய முடியாத காலத்திலுங்கூடப் பெண்கள் மிக அடக்கமாகவும், பொறுமையாகவும், சிரமத்தோடும், வேலையைச்செய்கின்றார்கள். அப்படிச்செய்தாலும் சாப்பிடுவதற்குச் சிறிதுநேரமாகிவிட்டால் நன்றிகெட்ட இந்த ஆண்பிள்ளைச் சிங்கங்களில் எத்தனையோபேர் பெண்களை வைகின்றார்கள். அடிக்கின்றார்கள். உதைக்கின்றார்கள். மேலும் ஐந்து வயது ஆணும்சரி ஐம்பது வயதுப்பெண்ணும்சரி என்றும் அநீதமொழியின் ஆட்சியால் தொட்டதற்கும் வைத்ததற்கும் பெண்களை ஆண்கள் அடிமையாகக்கருதுகின்றார்கள்.'

நூறு வருஷங்களுக்கு முன் புருஷன் செத்ததும் பெண்டடன்கட்டையேரினுல் இன்று விதவையாக மணமிழந்து மங்கலமிழந்து பூ விழந்து பொட்டிழந்து ஆடை ஆபரணங்களிழந்து சுகபோகங்களிழந்து கொண்டவனை எண்ணிக் கொம்பிழந்த கொடிபோல வாடிவதங்குகின்றார்கள். பெண்களில் வேசி யென்று சொல்லப்படுபவள் கூட ஆண்களைத் தேடிப்போவதரிது ஆனல் ஆணோ பெண்டாட்டியிருக்கையில் பின்னும் இச்சிக்கிறன் மனை[illegible]

[illegible]ஞல் வேரொ இந்தியா, பர்மா, கொள்ராவி முதலிய இடங்களுக்கு [illegible]டும் பாக்கிங் தபாற்செலவு [illegible]மாய் அனுப்பப்படும்.
'he indo Malaya Fancy Works, Benares City.

# ஆழந்தெரியாமல் காலை விடுவது யாருக்கும் ஆபத்துதான்.

(தோழர் கோ. சாரங்கபாணி)

தமிழ்நாட்டு மக்கள் வீரமும், ஆண்மையும் அற்றவர்களாயினும், கோழைத்தனத்திற்கும், ஏழைக்குறும்பிற்கும் உறைவிடமானவர்கள் என்பதற்குப்பொருள் வலியுடையோரும் வாயாடித்தனமுடையோரும், மற்றுஞ்சில வலியுடையோரும் மேற்கொள்ளும் அநீதச்செய்கைகளே போதிய திருஷ்டாந்தங்கள் இதைக்கண்டு மனம் பொறுத தமிழ் நாட்டுக்கவி ஒருவர் "மனிதரிலும் கல்லுண்டு, மரமுண்டு மனிதரிலும் நீர்வாழும் ஜெந்துவுண்டு, மனிதரிலும் மனிதருண்டு மனிதரிலே அனேகவித மனிதருண்டு" எனப்பாடியிருப்பதை இரங்கூனிலிருந்து வெளிவரும் இரு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மெய்யென நிரூபணம் செய்துவிட்டனர்.

அப்பத்திரிகைகளில் ஒன்றின் மூன்று பிரதிகளை எனது நண்பர் ஒருவர் நேற்றையதினம் எனக்குக்காட்ட அது எனக்கு எத்தகைய ஆச்சரியத்தையுங் கொடுக்கவில்லை. தமிழ்நாட்டில் வீறுகொண்டு நிற்கும் சுயமரியாதை இயக்கத்தைக்கண்டு காரணமின்றி அஞ்சி அதன்மீது துவேஷங்கொண்டு வீண்பழி சுமத்துங் கூட்டத்தாருள் இப்பத்திராசியர்களும் மாறு பெயர்களில் வசைபாடி அவர்களுக்குத்துணை போயிருப்போர்களும் அங்கத்தினர்கள் மனப்போக்குகளையும் அப்பத்திரிகையில் பல தலைப்புகள் கொடுத்து அச்சிட்டிருக்கும் வசனங்கள் நிரூபிக்கின்றன. சுயமரியாதை இயக்கத்தையும், அவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் இவர்கள் இப்படி இழிந்த முறையில் தாக்குவதை தடுக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு இதை எழுதவில்லை. இப்பத்திரிகைகள் ராஜா ஸர். அண்ணாமலை, ஸர். முத்தையா பர்மாசட்டசபை அங்கத்தினர் வெள்ளையப்பா முதலான செட்டிமார் குலத்துதித்த திறமைசாலிகள்மீது வசைபாடி அந்த பலத்தில் பத்திரிகை விற்று வந்திருக்கின்றன என்பதற்கு அப்பத்திரிகைகளின் பழையப் பிரதிகளே சாக்ஷியமானாலும், "ஆழந்தெரியாமல் காலை விடுவது ஆபத்தை விளைவிக்கும்" என அப்பத்திரிகைக் கூறும் பொது விதி அப்பத்திரிகைக்குப் புறம்பானதல்லவே!

சுடமரியாதை இயக்கத் தோழரானடியரிஞ்ஞு ஷன்று தம். அவர்கள் எல்லட்டும் என்றும் கூப்ப போட்டார்கள். தலைவர் எழுந்து கூட்டத்தை சமாதானப்படுத்தி எழுதி தோழர் வைசு. அவர்கள் ஆழந்தெரியாமல் காலை விட்டுக் கொண்டார் என முடிவுகாட்டியிருக்கிறது. அப்பத்திரிகைகளோ அதன் ஆசிரியர்களோ, அல்லது அவர்களுக்குத்துணை நின்றுவசை பாடியிருக்கும் நண்பர்களோ ஆழங்காண வொண்ணு ஆழ்கடலுக்கு ஒப்பானவர்கள் என்பதை அவர்களின் எழுந்து நிரூபிக்கவில்லையே!

வெளிச்சத்தைக்கண்ட விட்டில் பூச்சிகளுக்குத் தாவிக்குதிக்கும் தன்மையுண்டே ஒழிய தம்மைச் சுட்டுப் பொசுக்கும் தீ என்பதை உணரும் புத்தி கிடையாது. கர்மவீரரான வைசு அவர்களைக் கண்டிக்க முற்பட்ட அவர்கள் ஆழந்தெரிந்துதான் காலை விட்டார்களா என்பதை அனைவரும் அறியவேண்டியது அவசியமுமாகும். அது நீதி முறைக்கும் நேர்மையுடையது மாகும்.

தோழர் வைசு அவர்கள் 18 ஆண்டுகளுக்கு முன்னர் பொது நலச் சேவையில் பேருக்கங்கொண்டு வலிய வந்து நின்ற வீரர். தன வைசிய சமூகத்தைத் திருத்த அரும்பாடு பட்டு அத்தன வைசிய ஊழியர் சங்கத்தை நிறுவமூல புருஷராக நின்றவர். தனவைசிய வாலிபசங்கங்கள் 58க்குப் பொதுக் காரியதரிசியாகயிருந்து தொண்டாற்றியத் தொண்டர். தமிழ் பாஷைக்குப் புத்துயிர் அளித்த தேசியக் கவி சி. சுப்ரமண்ய பாரதியாரை அனைவரும் அலக்ஷியம்செய்து ஒதுக்கி விட்ட அந்திய காலத்தில் உவப்புடன் ஆதரித்தப் பெரியார். பயங்கரமான செல்வாக்குடைய பட்டதாரிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது தாம் பிறந்த காடு காத்தனில் தோழர் காந்தி அவர்களை இருமுறை வரவேற்று இன்பமளிக்கையில் உபசரித்து அடிகளால் உவக்கப் பெற்ற நல்லார். அது காலை தோழர் காந்தி அடிகள் தேவக்கோட்டையில் ஒருகஜம் கதர் துணியை ஆயிரம் ரூபாய் மதிப்பிட்டு அதற்குக் குறையக் கேட்டால் கொடுக்கமாட்டேன் என அடிகள் ஏலங்கூற அந்த ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்க செட்டியார் நாட்டில் யாரும் முன் வரவில்லை என்பதையும், அந்தக்கதர் துணியை மறு நாள் காரைக்குடியில் ஏலம் போட நிச்சயத்திருக்கும் செய்தியையும், அன்றிரவு காடு காத்தானில் கேள்விபட்டு கதரில் நம்பிக்கை இழந்த தோழர் வைசு அவர்கள் காந்தி உத்தமர், அவர் வாழ்க்கை ஆயிரம் ரூபாய்க்குக் கூட மதிக்கா விட்டால் அது செட்டியார் நாட்டிற்கே மானக்கேடாகும் என்றப் பொறுப்புணர்ச்சி கொண்டு அதற்கெனவே மறு நாள் காரைக்குடிக்குச்சென்று காந்தி அவர்கள் ஏலங் கூறிய ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ரூபாய் கூட்டி 100-ரூபாய்க்கு அந்த ஒருகஜம் கதர் துணியை வாங்கி செட்டிமார் நாட்டின் மானங்காத்த வள்ளல்.

தமிழ் நாட்டில் குருகுலம் நிறுவிய தியாகி வி. வி. எஸ். ஐயரின் தூய்மையையும், பேரறிவையுங் கண்டு அக் குரு குலத்திற்கென மூவாயிரம் ரூபாய்வலிய அனுப்பி தமது பெயரை வெளியிட வேண்டாம் என்ற தர்மிஷ்டர் மகாதேவ அய்யரும் அவரைப்போன்ற பச்சைபார்ப்பனரின் கூட்டுறவின் கேட்டால் மாசற்ற அக்குருகுலத்தில் திருஷ்டி தோஷம் நுழைந்துகேடுசூழ்ந்ததால் அதனை ஒழிக்கநியமிக்கப்பட்ட —"ஊழியன்" ஆசிரியர் தோழர் ராய சொக்கலிங்கன், "குமரன்" ஆசிரியர் தோழர் சொ. முருகப்பா "தமிழ் நாடு" ஆசிரியர் தோழர் பி- வரதராஜலு "ரேஷனலிஸ்ட்" ஆசிரியர் தோழர் எஸ் ராமநாதன் "குடி அரசு" ஆசிரியர் தோழர் ஈ. வெ. இராமசாமி இன்று இந்தி சட்டசபைத் தலைவராயிருக்கும் தோழர் ஸர். ஆர். கே. ஷண்முகம் ஆகியவர்களை அங்கத்தினர்களாகக்கொண்ட—குரு குலக்கமிட்டியின் தலைவர் 1922ல் ராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் 1923ல் அகில இந்தியகாங்கிரஸ் சென்னை மாகாணக்காங்கிரஸ்கமிட்டிகளில் அங்கத்தினர். சுயராஜ்யகட்சிவீறுகொண்டு சட்டசபைகளை மிகச்செல்வாக்குடன் கைப்பற்றிநின்றகாலத்தில் "ராஜாங்க சபைக்கு" அபேக்ஷகராய் நிற்கும்படிக்கு அக்கட்சியின் முழுபலமுங் கொடுத்து வற்புறுத்தியும் அது காந்தி அடிகளின் கருத்திற்கு விரோதம் என்ற காரணத்தால் இணங்காது மறுத்து ஒதுங்கி நின்ற தியாகி.

நச்சாந்துபட்டி செட்டிமார்கள் கூடிதோழர் வைசு அவர்களின் கருத்திற்கிணங்காமல் அக்கூட்டத்தினர்செய்த அநீதியை தொலைக்கும் அளவு மரணப்பட்டினியை மேற்கொண்ட இரண்டு தினத்திற்குள் அக்கூட்டத்தார் தோழர் வைசு அவர்களின் கருத்திற்கிணங்கி அவர்கள் செய்த அநீதியை தடுத்து விட்டனர்.

இத்தகைய உயிர்த்தியாக உணர்ச்சியுடைய தமிழர்கள் நாட்டில் வெகுவெகுசொற்பம் மாசற்றதியாகிகள் உயிரோடு இருக்குந்தனையும் அவர்களைப் போற்றி ஆதரிக்கும் கெட்டவழக்கம் தமிழ்நாட்டிற்கேது?

செட்டிமார்நாட்டில் தமிழ் பத்திரிகைத் தோன்றுவதற்கு காரணமாய் நின்றதோடல்லாமல் அதற்கு மேற்பார்வை யாளராகவும்வைசு அவர்கள்நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் வைசு அவர்கள்எழுதிய நூற்றுக்கணக்கான கட்டுரைகள் தமிழ் நாட்டுப்பத்திரிகைகளில் வெளிவந்துபோற்றப்பட்டிருப்பதும், பலபத்திரிகைகள் அவர்களின் கட்டுரைகளுக்கென காத்துக்கிடப்பதும், பலபத்திரிகைகளுககு ஜீவதாதுவாய் நின்றிருப்பதும் தமிழ்நாடு அறிந்ததேயாகும்.

சுயமரியாதை இயக்கம் தோன்றியநாள் தொட்டு நாளதுவரை அவ்வியக்கத்தின் நிர்வாக அங்கத்தினராய் இருந்து வரும் வைசு அவர்கள் அவ்வியக்கத்தில் ஆங்காங்கு நிகழும் குறைகளைக் கண்டித்து திருத்துவதில் முன் நிற்பவர்கள்.

உதாரணமாக சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு குறைகூறி நிந்திப்பதையேக் குறியாக கொண்டவர்கள் சு. ம காரர்கள் என்று இழிவாகக் குறிப்பிட்டுப் பேசுவதும் எழுதுவதும் வழக்கமாய்க் கொண்டனர் அதற்கு எற்றபடி பதிலளிக்கும் போது அவர்களால் பு. ம. க்காரர்கள் என்று சுயமரியாதை இயக்கக்காரர்கள் எழுதவும் பேசவும் வேண்டுமென்று ஆசைப்பட்டதை தோழர் வைசு அவர்கள் கண்டித்த சந்தர்ப்பங்கள் பலவுண்டு. ஜாதி மதப்பேதக் கொடுமைகள் ஒழிக்க முன்னிற்கும் சுயமரியா

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# குருட்டு முதலாளியும் செவிட்டு சர்க்காரும்.

(காம்ரேட்)

நிழலில் இருப்பவனுக்கு வெயில் கஷ்டம் தெரியாது. புளிச்ச ஏப்பக்காரனுக்கு அகோரப் பசியின் கொடுமை விளங்காது. தரித்திரத்தில் நெளியும் ஏழைக் கூலியின் தவிப்பு, ஒய்யார உல்லாச வாழ்வில் புரளும் முதலாளியின் கடின சிந்தையில் படாது- சுய நலம், அகம்பாவம் ஆகிய குப்பை கூளங்களால், மனித தர்மம் மூடிப் புதையுண்டு கிடக்கிறது. பரிணாம ஏணியில், புழு, பூச்சி, பறவை, மிருகத்தினும் மனிதனுடையபடி, உயர்ந்தபடி ஆயினும் பசியும் பிறவும் மனிதனை வதைப்பது மனித சமூகத்திற்கே இழுக்கு. இந்த அவமானம் பணக்காரன் இருதயத்தைச் சுடுவதாய்த் தெரியவில்லை. முதலாளி, கண்ணிருந்தும் குருடனாய் வாழ்கிறான். பணக்கொழுப்பு, பார்வையின் கூர்மையை மழுக்கி விடும் போலும்!

ஃ ஃ

மிட்டாதார், ஜமீன்தார்களின் களஞ்சியங்களில் நவதான்யங்களும் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. தரித்திரக் கூலி, பகல் முழுவதும் உடம்பைப் பிழிந்துவிட்டு; படி நெல்லுக்கு எஜமான் வீட்டு வாசலில் காத்து நின்று கெஞ்சிப் பல்லைஇளிக்கிறான். தொழிலாளிகளின் பிரயாசையால், விளை பொருள்கள் செய் பொருள்களாகி, முதலாளியின் பண்டகசாலைகளில், தினுஸு தனுஸாக நிரம்பியிருப்பதைப் பார்க்கிறோம். பக்கத்தில், தொழிலாளி உடம்பு இளைத்து வெறுங்கையோடு ஆலாய்ப் பறப்பது தினசரிக்காட்சி. சிறு பாலார், மித மிஞ்சி நுகர்ந்து திமிர்கொண்டு, உலகத்தில் வம்புதும்பு வல்லடி வழக்குகளை உற்பத்தி செய்து வருவது நித்த நடைமுறை. அநியாயங்களும், அக்கிரமங்களும் இவர்கள் லீலைகள் தான். பெரும் பான்மையோர் "இல்லை" என்னும் அவச் சொல்லை விண் முட்டக் கிளப்புகிறார்கள். பசியும், பிணியும், அகால மரணமும் இவர்களைக் கொன்று தின்னுகின்றன. பிடித்தவர்க்குப் பெண்டு, உதைத்த காலுக்கு முத்தம், இதுவே இவர்கள் நிலைமை. ஓரிடத்தில் அகம்பாவ அமித போக 'எவரெஸ்ட்' சிகரம்; அதனை அடுத்து விரிந்த விசாலமான ஆழமான தரித்திர "பஸிபிக்" மகா சமுத்திரம். தோழர்களே! இது தான் புனிதமான தனி உடைமை உலகின் ஆனந்த தரிசனம்.

ஃ ஃ

நன்றியுள்ளபிராணிநாய். நாயினுங்கடைகெட்ட பிராணிகள்முதலாளிகளே. "பாடுபட்டால் கூலி" என்பர் ஞாய வல்லுநர். பாட்டாளி பலனைக் கூட்டோடு சூறையாடும் படுமோசக்காரர், பூர்ஷுவாக்கல்தான். ஏழை எளியவர் விஷயத்தில், ஈனச் செல்வர்களுக்கு, கண்ணில்லை, காதில்லை, எண்ணமனதுமில்லை. ஆனால்; 'இல்லாத' உழைப்பாளிகளின், சதையும் ரத்தமும் உழைப்புந்தான், முதலாளிகளின்வாழ்வும் போகமும்அட்டகாசத்தின் வேரும்நீரும். மனிதவர்க்கத்தின் ஜீவசக்தி வரண்டுபோகிறது; உயிர்நாடி தளர்ந்துவருகிறது; ஆணிவேர் அழுகிச் சிதைந்து தேய்கிறது. இக்கொடிய போக்கிற்கு "தனிவுடைமை அதிகாரி"களே பொறுப்பு. பொறுப்புணர்ச்சி தொந்தி தொப்பைகளுக்கு அவசியமா?

ஃ ஃ

"ஆரியக்கூத்தாடிக்குக் காரியத்திலேயே கண்" பம்பாய் முதலாளிகளுக்கு லாடக்கொள்ளையிலேதான் திருஷ்டி. 80000 பேர் வேலை நிறுத்தம் செய்து வாடி வதங்கினால் இந்தக் "குபேரர்"களுக்கென்ன நஷ்டம்? இவர்களுடைய பெண்டுபிள்ளைகள் கஞ்சக்குத் திண்டாடுகிறார்களா? அல்லது சித்தப்பா பெரியப்பா மக்கள் பஞ்சப்பாட்டு பாடுகிறார்களா? ஒன்றுமில்லை. தூ! நரமாமிச பக்ஷணிகள்! மனித உருக்கொண்ட கரடி புலிகள்!! உழைக்கும் உலகத்தின் வாட்டமறியும் ஈரம் துளிகூடக் காணக்கிடைக்காத வரட்டு முண்டங்கள்!!! பாட்டாளிகளின் பரிதாப இசையை "கண்களிரண்டிருந்தும் காணுந் திறமையற்ற" கபோதிகள்!!!! பம்பாய் மில் சொந்தக்காரர்களின் கண்களில் தன்னலச்சதை வளர்ந்து வளர்ந்து பார்வையைக் குறைத்துக்கொண்டு வருவதாகத் தோற்றுகிறது. நாடு முற்றிலும் காட்டப்படும் அனுதாபம் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை உரஞ்செய்து வருவது பிரத்தியட்சம். ஆமதாபாத், நாகபுரி, டில்லி, கராச்சி முதலிய நகரங்களின் ஆலைத் தொழிலாளிகளும் பம்பாய் வேலைநிறுத்தத் தீர்மானத்தை அங்கீகரித்துக் கையொப்பமிட்டு வருகிறார்கள். இமயம் முதல் குமரிவரை எங்கும் இதே பேச்சு. ஆயினும் முதலாளிகளின் கொட்டமும் சூழ்ச்சியும் குறைந்தபாடில்லை. ஆணவத்தால் தலைகொழுத்து, மனிதவர்க்கத்தை அலட்சியம் செய்யும் முதலாளிப் பேயே! உனது நெஞ்சைப் பிளந்து ரத்தங்குடிக்க உழைப்பாளிகளின் ஆத்திரமும் ஆவேசமும் திரண்டு உருண்டு எழுந்து ருத்ராகாரமாய் விரைந்து வருவதைத் திரும்பிப்பார்!

ஃ ஃ

"நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிற்கு புல்சுமை போகுமா?" என்பதுகாலங்கடந்த கேள்வி. 5000 வருஷங்களுக்கு முன் இக்கேள்வியை தொழிலாளி கேட்டான். இன்றும் அதே வினாவை பெருமூச்சோடு வினவுகிறான். பாரதகாலத்தைவிட இன்று உலகில் உண்பண்டமும் தின்பண்டமும் பன்னூறுமடங்கு பல்கிப்பெருகி விட்டது. ஆனால் பாட்டாளி நிலைமையோ, அன்றும்இன்றும் ஒன்றுதான். "பணம் பாதாளம் வரைப்பாயும்," என்றது பொய்யல்ல. புனிதமான ஜனநாயகக்கொள்கையையும் காலடியில் போட்டுமிதித்துவைத்து நிற்கிறது முதலாளி வர்க்கம். ஆயின், "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்றதுசரிதானே? இந்திய ஆட்சி ஹிட்லர், முசோலினியின் யதேச்சாதிகாரமல்ல. இங்கிலாந்தைப் போல், ஜனநாயகத்துவத்தை அஸ்திவாரமாகக்கொண்டதே இந்தியா ஆட்சி என்று பொதுவாக கூறப்படுகிறது. ஆனால் காரியத்தில் ஜனநாயக தத்துவமோ குதிரைக் கொம்புதான். முதலாளிக்குச்சாதகம் தொழிளாளிக்கு பாதகம்; ஒருகண்ணில் வெண்ணை, ஒரு கண்ணில் சுண்ணம்பு. தொழிலாளிகள் துஷ்ட ஜநதுக்களா? "வேலை கொடு; சோறு போடு" என்று கிளர்ச்சி செய்தால் துப்பாக்கிப் பிரயோகமா? தலைவர்களைச் சிறைக்குள் மடக்குவது தொழிலாளர்கஷ்டநிவாரணத்திற்குக்குறுக்கு வழியா? கஞ்சி என்ற வயிற்றில் கல்லைப்போடுவதா நீதி.?

ஃ ஃ

நாட்டுமாந்தரெல்லாம்—தம்போல் நரர்களென்று கருதார். ஆட்டு மந்தையாமென்—றுலகை அரசரென்ணி விட்டார்" என்றார் பாரதி. ஆட்டுக்குமேய்ப்போனும் புல்லுமுண்டு. அரசாங்கம் குடிமக்களுக்கு வேலையும் சோறும் கொடுக்கவேண்டாமா? மக்களுக்காக அரசாங்கம் அவசியம். அரசாங்கத்திற்காக மக்கள்வாழ வேண்டிய நிலைமை ஏற்படின், அது அநியாயம். ஏகாதிபத்தியம் முதலாளிகளின் கறகோட்டை. தொழிலாளியோ அனாதைக் குழந்தை. அகதிக்கு யாரும் துணையில்லை இப். பாழுமுலகில் பாதிகூலி பற்றுதென்று உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு பயங்கரவேலை நிறுத்தத்தில் நுழைந்துள்ள தொழிலாளிகளைக்கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்று பிடிவாதம் செய்கிறது சர்க்கார். அரசாங்கம் இவ்விஷயத்தில் தலையிட்டுத்தக்கது செய்யவேண்டுமென்று நாடு முற்றிலுமிருந்து விடுத்த விண்ணப்பங்கள் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயின. சர்க்கார் பொறுப்பற்ற செவிட்டுக்காதையே காட்டுகிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் லட்சணம்.

ஃ ஃ

வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர் மீது போலீஸ் புலிகளின் பாணாத்தடிகள் பறந்தனவாம், குண்டு மாரிபொழிந்ததாம், மேதினத்தின் சன்மானமாகஇவை கிடைத்தன வென்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மே தினத்தில் வழங்கப்பட்டபரிசுகளாகிய துப்பாக்கிச்சூடும் பாணாத்தடிப் பூசையும். தொழிலாளிகளின் தூக்கத்தைக் குலைத்துக் உணர்ச்சியைக்கிளப்புமென்பது திண்ணம். நெருப்பாற்றில் எதிர் நீச்சு நீந்தியே தொழிலாளிகள் வெற்றிக்கொடி நாட்ட வேண்டும். குருட்டு முதலாளிகளையும் செவிட்டு சர்க்காரையும் தாண்டியே பாட்டாளிகள் சமதர்ம உலகத்தைத் தரிசிக்க முடியும்.

---


**ஜரிகைக்கம்பிப்பட்டு அங்க வஸ்திரங்கள்.**

மிக அழுத்தமாய் நல்ல மிருதுவான பட்டில் நெய்யப்பட்டது. நீடித்து உழைக்கக்கூடியது. சலவைக்குப் போடலாம். உத்திரவாத முள்ளது

5முழம் ஜரிகைக்கம்பி யுள்ளது 1க்கு விலை ரூ 4—0—0

5 முழம் சாதா ப்ளையின் 1க்கு விலை ரூ 3—4—0

என்-பி:- இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு மட்டும் பாக்கிங் தபாற்செலவு இனாமாய் அனுப்பப்படும்.

The indo Malaya Fancy Silk Works, Benares City.

புரட்சி

ஈரோடு 1934- மே மீ 6-உ

# அன்சாரியும், அபேதவாதமும்.

அளவுக்கு மேற்பட்ட பிரசாரத்துக்குப் பின், அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி அங்கத்தினர்களும், அகில இந்திய சுயராஜ்யக் கட்சியின் தூண்களும் ராஞ்சியில் கூடினார்கள். காந்தியார், ஆச்சாரியார், சரோஜினியார் முதலிய பழைய பிரபல தலைவர்கள் அங்கு விஜயமானார்கள். அந்தரங்கமாகவும், பகிரங்கமாகவும், சம்பாஷணை மூலியமும், பல கூட்டங்கள் நடந்தது. கடைசியாய் சில தீர்மானங்கள் செய்ததாக எல்லா பத்திரிகைகளுக்கும் கிடைக்கும்படி செய்தி அனுப்பி இருக்கிறார்கள்.

இது வரையில், சுயராஜ்யக் கட்சியார்சட்டசபையில் போய் என்னசெய்யப்போகிறோம்என்பதை பற்றி பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள். இவையாவும் ஒன்றுக்கொன்று மிகுந்த முரண்பட்டதாகவே இருந்து வந்தது. சீர்திருத்த அறிக்கையை கண்டிப்பதுமட்டும் எங்கள் நோக்க மென்பவர்களும், முஸ்லீம்களுக்கு அதிக சலுகை காட்டப்பட்டதை— மட்டும் கண்டித்தவர்களும் சட்ட சபையில் புகுந்து சர்க்காரை திக்கு முக்கலாடச் செய்வதே எங்கள் நோக்கமென்றவர்களும், காந்தி சொன்ன ஆலயப்பிரவேச தீர்மானத்துக்காகவே சட்ட சபைபோகிறோம் என்றவர்களும், சட்ட சபையில் வரும் ஆலயப்பிரவேச மசோதாவை தோற்கடிக்கவே நான் போகிறேன் என்ற மூர்த்தி போன்றோரும், இவ்விதம் பல விதமான பிரசங்கம் செய்த தலைவர்கள் அங்கு கூடி தீர்மானங்களை தயாரித்து இருக்கிறார்கள்.

இத் தீர்மானங்கள் 18ந்தேதி கூட விருக்கும் காங்கிரஸ் கமிட்டி பாட்னா கூட்டத்துக்கு பின்பே உயிருடைய தாகுமென்று தெரிவதால், நாம் அதிகம் அதைப்பற்றி பிரஸ்தாபிப்பது பயனற்றதாகவும் இருக்கலாம். இந்த ராஞ்சி கூட்ட தீர்மானங்களை நமது மாகாணப் பத்திரிகைகளில் ஜஸ்டிஸ் ஒன்று தவிர ஏனைய சகல பத்திரிகைகளும் அப்படியே ஆதரித்து எழுதி வருவது தான் மிக விசேஷமானதாகும். ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், இப்பத்திரிகைகள் தான் இப்படி எழுதுகிற தென்று எண்ணி விடுவதற்கில்லை. நமது அல்லாதார்கள் பத்திரிக்கைகள் இருக்கிறதே இவைகளும் இக்கூட்ட நடவடிக்கைகளைப் பற்றி தங்களின் உண்மை நிலையை வெளியிடாதது பெருந்தவறாகும். இவைகள் எதற்காக பயப்படுகிறது என்பதையும், பயப்படவில்லையானல், ராஞ்சி திட்ட மானது எந்தமுறையில்காணையமானது என்பதையும் ஏன் பகிரங்கமாக எழுதக்கூடாது. இவ்விதம் இவர்கள் நடந்தால் தமிழர்கள் கண் விழிக்கும் காலத்தில் தங்களின் இழி செய்கையைப் பார்த்து ஏளனமாக எண்ண மாட்டார்களா? என்பதையும் சிந்தித்து பார்த்த பின்பாவது, ஐயருக்கும், ஐயங்காருக்கும் பயப்படாது தங்கள் கடமையை செய்யுமென நம்புகிறோம்.

ராஞ்சியில் கூடிய கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள்:—

1. அகில இந்திய சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்த முடிவு செய்கிறது.

2. அக்கட்சி இந்திய சட்டசபைக்கு அபேக்ஷகர்களை நிறுத்த முயலுதல்.

3. இக்கட்சிக்கு ஓர் வேலைத் திட்டம். இதன் வேறு பெயர் அபேதவாத திட்டமென்பது.

4. சுயநிர்ணய சுதந்திரத்தை யொட்டி தேசத்தின் எதிர்கால அரசியலை நிர்ணயித்துக்கொள்வதற்காக,பிரதிநிதித்வ சபையை இனி கூட்டிவைக்க வேண்டுமென்பது.

5. அரசியல் திருத்த அறிக்கையை நிராகரிக்கிறது. (ஆனால் வகுப்பு பிரச்சினை முடிவில், பிரதிநிதித்வ முறையைப்பற்றி வெளியிடப்பட்டுள்ள விஷயங்களை ஏற்றுக் கொள்வதைப்பற்றியோ, நிராகரிப்பதைப்பற்றியோ, யோசிப்பதற்கு இது ஏற்ற சமயமல்லவென்று கருதுகிறது.)

நமது தேசியத் தியாகிகள் இன்று பத்து வருடங்களாக இந் நாட்டின் ஏழைமக்களின் நன்மைக்காகச் செய்து வந்துள்ள முயற்சியின் பலனாய் என்ன நன்மைகள் ஏற்பட்டு இருக்கின்ற தென்பதையும், இதுவரையில் அவர்கள் பொதுஜனங்களை யேமாற்ற எத்தகைய ஜெகஜாலங்களையெல்லாம் செய்துவந்திருக்கிறார்கள் என்பதையும், இவர்கள் உழைப்பின் பயனாய் மக்களின் நித்திய வாழ்க்கையில்;புத்தி களிமண்ணைதுடன், புதிய சீர்திருத்தத்தினால் அதிக அரசாங்க செலவு இவைகளைத் தவிர வேறெந்த நன்மையையும் இது வரையில் நாம் கண்டதில்லை. இந்த முறையிலேயே இன்று தங்கள் கலத்திற்காகவே பொதுஜனப் பெயரால் ஓர் நாடகம் நடிக்கிறார்களென்பதை நாம் சொல்லாமலிருப்பதற்கில்லை.

உதாரணமாக ராயல் கமிஷன் நியமித்து, அது இந்திய நாட்டில் விசாரணை செய்த பிறகுதான் சீர்திருத்தம் பார்லிமெண்டில் கொண்டுவர வேண்டுமென்றார்கள். சைமன் கமிஷன் நியமனமானதும், அதில் இந்தியரில்லை; ஆதலால் அதை பகிஷ்கரிக்க வேண்டுமென்றார்கள். அதே சமயத்தில் எல்லா இந்தியக் கூட்டத்தைக் கூட்டினார்கள், அதில் சுயராஜ்யத் திட்டமென்று நேரு திட்டத்தைத் தயாரித்தார்கள்.

இத் திட்டத்தை எல்லா முஸ்லிம்களும் ஆதி திராவிடர்களும் எதிர்த்தார்கள். சர்வ கட்சி மகாநாட்டைக் கூட்டி நேரு திட்டம் நிறைவேற்றப் படுமென்றார்கள். அதே சமயத்தில் இந் நாட்டுக்கு விஜயஞ் செய்த கமிஷனிடம் ஹிந்து மகாசபைப்பேராலும், சீர்திருத்தச் சங்கப் பேராலும், தனித் தனி தலைவர்கள் பேராலும், சைமன் கமிஷனிடம் நேரில் சொல்லாமல் புத்தகம் அடித்துத் தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டார்கள்.

இக் கமிஷன் அறிக்கையை இங்கிலாந்தில் யோசிக்கும் போது இந்தியப் பிரதிநிதிகளும் இருக்கவேண்டுமென்றார்கள். இதற்குள் இந் நாட்டில் இத் தேசீயத் தலைவர்களின் சமூகத்தாரால் பாதிக்கப்பட்டு நைந்து ஏமாந்திருந்த சமூகங்களான, முஸ்லீம்களும், ஆதிதிராவிடர்களும் தங்கள் குறைகளை கமிஷனிடம் சொல்லியதால், இவைகளுக்கு பரிகாரம் கிடைத்துவிடுமோ என்று இவர்கள் பயந்து உப்புக் காச்ச புரப்பட்டார்கள்.

இங்கிலாந்து வட்டமேஜை மகாநாடானது உண்மை பிரதிநிதித்வமுள்ளதல்ல வென்றார்கள். டாக்டர் அன்சாரி ஒருவர்தான் முஸ்லீம்களின் உயிர் நாடி; அவர் இல்லாத வட்ட மேஜை மகாநாடு வட்டமேஜை மகாநாடல்ல; நாலு மூலை மகாநாடு என்றார்கள். அகில இந்திய முஸ்லீம்களின் முயற்சிக்கு எதிரிடையாக டாக்டர் அன்சாரியை பிடித்து தேசீய முஸ்லீம்கள் கட்சி என்று கத்தினார்கள்.

பின் பிரதிநிதித்துவமற்றதென்ற வட்ட மேஜைக்கு காந்தியும், சரோஜினியும், மாளவியாவும், ராதாபாயும், ரெங்கசாமி ஐயங்காரும் சென்றார்கள்.

அங்கு இவர்களுக்கு சகல சௌகரியங்களும் செய்துகொடுத்தும் அன்சாரி வராததற்கு வருந்தினார்கள்.

முதன் மந்திரி மெக்டனால்டு "நீங்களெல்லோரும் ஒன்று கூடி ஓர் திட்டம் தயாராரியுங்கள்; அதைப்பற்றி ஆலோசிப்போம்" என்றதற்கு, அது இவர்களால் முடியவில்லை. முஸ்லீம்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் விசேஷ சலுகை காட்டப்பட்டதைக் கண்டித்தார்கள். இங்கு வந்து எல்லாசட்டங்களையும் மீறு என்றார்கள். இறுதியில் புனா பட்டினியும், ஆதிதிராவிட ஏமாற்றமும், தான் மிஞ்சியது.

இந்த நிலைமையில் இதுவரையில் இவர்கள் சொல்லி வந்ததுக்கும், செய்துவந்தவைகளுக்கும், அல்லது தீர்மானித்ததுக்கும் நடந்து கொண்டவைகளுக்கும் ஏதாவது கடுகளவு சம்பந்தமோ, நாணையமோ, யோக்கியதையோ, இருக்கிறதா? என்பதை சிந்திக்கக்கோருகிறோம்.

அடுத்தாற் போல் இன்று அபேதவாதத்திட்டமும் மீண்

டுமொரு சர்வகட்சி மகாநாடும் என்கிறார்களே! இதிலாவது ஏதாவது உண்மையோ உருப்படியான நன்மையுடைய செய்கையோ இருக்கிறதா? என்பதையும் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இவைகளெல்லாம், இவர்கள் கண்மூடித்தனமாகச் செய்யவில்லை என்பதும், மனதில் கொண்ட சூழ்ச்சியின் பயனாகவே, அன்சாரியைப் பிடித்து, அபேதவாதத்திட்டம் தயாரித்து, அகில இந்திய சர்வகட்சி கூட்டம் போடப் போவதாகக் கூறுகிறார்கள் என்பது விளங்காமல் போகாது.

இன்று அன்சாரிக்கும் அபேதவாதத்துக்கும், அகில இந்திய கூட்டத்துக்கும், வந்த அவசியமென்ன? இதற்காகவா? இவ்வைந்து வருடமாக சட்ட மறுப்புகள், உப்புப் போர்கள், ஈச்சமரம் வெட்டுதல், பாங்கி மறியல், ஜவுளிக்கடைகள் மறியல், உண்ணாவிரதம் பல ஆயிரம்பேர் சிறைவசம் என்பதை எல்லாம் யோஜித்தால், இக்கஷ்டமுழுவதையும் ஓர் கூட்டத்தார் தங்கள்நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்வதிலேயேகருத்துடையவர்களாக இருக்கிறார்கள் என்பது நன்கு தெரியவரும்.

பாமர மக்களை ஏமாற்ற எந்தெந்த வார்த்தைகளையும், எந்தெந்த பேர்களையும், எப்படி உபயோகிக்க வேண்டுமென்பது நமது தேசீய தியாகிகளுக்கு தெரியாததல்ல.

மௌலானா மகமதலிக்கும், ஷௌகதலிக்கும்,கொடுத்த சிறப்பைவிட, காலம் சென்ற பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் அவர்களுக்கு கொடுத்த சிறப்பைவிட, மதிப்பைவிட, விளம்பரத்தைவிட அதிகம் இன்று டாக்டர் அன்சாரிக்கு கொடுத்துவிடவில்லை.

லெக்ஷக்கணக்கான பொது மக்க்ள் கூடிய கூட்டத்தில்அலி சகோதரர்களது சட்டைப்பைக்குள்என்றவர்கள் முஸ்லீம்க்ள் நன்மையையும், முஸ்லீம்களை ஏமாற்றும் வடநாட்டு ஹிந்து தலைவர்களின் புரட்டையும்அலி சகோதரர்கள் எடுத்துரைத்ததும் அவர்கள்தேசத்துரோகிகள் என்று தூற்றப்பட்டதையும் யாராவது மறந்துவிடமுடியுமா?

சட்டசபையில் 'முட்டுக்கட்டை போடப்போகிறோம் என்று ஓட் பெற்றுக்கொண்டு இந்திய சட்டசபையில் சர்க்காருடன் ஒத்துழைப்பது அயோக்கியத்தனமானதல்லவா? சர்க்காருடன் முட்டுக்கட்டைபோட எண்ணமில்லையென்றால் கண்ணியமாக சுயராஜ்பக் கட்சிக்காரர்கள் இந்திய சட்டசபையில் இனி ஒத்துழைக்கவே போகிறோமென்று ஏன் சொல்லக்கூடாது? என்று லாலாஜீ கேட்டதும் தேசீயப் புலிகள் கண்ணுக்கு லாலாஜீ தேசத் துரோகியாய் மாறிவிடவில்லையா? இது வடநாட்டுப் பார்ப்பனத் தலைவர்கள் செய்கையென்றால், நமது மாகாணத்தில் ''ஜஸ்டிஸ்'' கட்சிக்காரர்களை எதிர்த்து தோற்கடிக்கிறவரையில் தோழர்கள் டாக்டர் வரதராஜுலுவும் திரு. வி. கல்யாணசுந்திரமும், நமதுதலைவர் ஈ.வெ.ராமசாமியும் இம் மாகாண எல்லாப் பார்ப்பனர்களாலும் கொண்டாடப்பட்டதும்,வண்டிகளில் வைத்து இழுக்கப்பட்டதும் இவர்கள் படத்தை எங்கு பார்த்தாலும் திறந்து வைத்து தென்னாட்டுத் திலகர், தமிழின் மணம், வைக்கம் வீரரென்றெல்லாம் புகழ்மாலை பாடிய நமது தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள், இவர்கள் சட்டசபைத் தேர்தல் காலத்தில் இந்திய சட்ட சபைக்குத் தமிழ்நாட்டின் ஆறு ஸ்தானங்களுக்கும் ஆறு ஐயங்கார் பார்ப்பனர்களைத்தான போடவேண்டுமென்று கேட்டதும் இம் மூவரும் தேசத் துரோகியாகவும், சர்க்கார் தாசர்களாகவும் மாறிவிட்டது யாருக்குத் தெரியாது?

இப்படிப்பட்ட மலைகளெல்லாமே தூளாகிக் கருவேப்பிலையாகி இந்நாட்டு அகில இந்தியப் பார்ப்பனர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததெனில், இவர்களையே தங்கள் வேலை முடிந்ததும் பார்ப்பனர்கள் காலை வாரியெறிந்துவிட்டார்களென்றால் டாக்டர் அன்சாரி விளம்பரப் படுத்தப் படுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

இன்று இவர்களால் ஏமாற்றப் பட வேண்டுவது முஸ்லீம் சமூகமாகும். இதற்கு முன்னதாகவே விளம்பரமாகி இருக்கும் ஓர் முஸ்லீம் கனவானைப் பிடித்து தங்களின் திருவிளையாடல்களைத் தொடங்கி விட்டார்கள். அதுவும் சமூகத் தீர்ப்பைப்பற்றி ஒன்றுப் சொல்லாமல், அரசியலறிக்கையை கண்டிப்பதில் மட்டும் தான் அன்சாரி ஒத்து வருகிறார். இவர்கள் எதிர் காலத்தில் கூட்டப்போகும் அகில இந்திய சர்வ கட்சி மகாநாடு இருக்கிறதே அக்காலத்தில் இவர்கள் திட்டத்தை நாம் பார்த்துக் கொள்ளலாம்.

அபேத வாதமா? இது மிக உற்சாகமுள்ள பதம் என்பதற்காகவே இதை பிடித்து போட்டார்கள். லாகூரில் கூடிய அ. இ. கா. தீர்மானித்த திட்டமே சுயராஜ்ய திட்டமென்றதுக்கு உள்பட்டே இன்று அபேத வாத சுயராஜ்ய கட்சி வேலைத்திட்டமும் தயாரிக்கப் பட்டிருப்பதாக அதன் தலைவர்களே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். லாகூர் காங்கிரஸ் தீர்மான மான சுயராஜ்ய தீர்மானத்தைப்பற்றி அன்றே நாம் கண்டித்து கூறியிருக்கிறோம். அதிலுள்ள பாதுகாப்புகள் பயனற்ற ஏமாற்ற சொற்கள் என்று எழுதி யிருக்கிறோம்.

கோவில் நுழைய அநுமதிகிடைக்காதவர்கள் 7கோடி இருக்கிறார்கள். ஹிந்துக்கள் 10கோடி என்றால் இதில் 7கோடி போக மிஞ்சிய 11 கோடியில் ஒரு கோடிக்கு உட்பட்ட பார்ப்பான் பிழைக்கவே அது இருக்கிறதே தவிர, பெரும் பகுதிமக்களுக்கு 18கோடி பேருக்கு 1 கோடி பார்ப்பானுக்குள்ள சுதந்திர மில்லையே? மதப்பாதுகாப்பு என்றால் 1 கோடிக்கா 18 கோடிக்கா என்று கேட்டேம்.

நிலப்பாதுகாப்பு என்றார்கள். இந்நாட்டில் உள்ள 35 கோடி மக்களில் 33 கோடி மக்களுக்கு நிலச் சொந்தம் என்றாலே இன்னதெனத் தெரியாதே! 35 கோடி மக்களுக்காக உள்ள நிலத்தை இரண்டு மூன்று கோடி மக்கள் ஆண்டு அநுபவிக்கிறார்களே? நிலப்பாதுகாப்பு என்றால் 33 கோடி மக்களுக்கா 2 கோடி நிலச் சொந்தக்காரர்களுக்கா என்றும் கேட்கிறோம்.

இதைப்போன்றே எனையவைகளுமிருக்கிறது. ''சுயராஜ்யம்'' என்றார்கள். குடியேற்ற நாட்டு ''சுயராஜ்யமென்றார்கள்''. ''பரிபூரண சுயராஜ்யம்'' என்றார்கள். இம்மூன்றும் பழசாகி விட்டதால், மக்கள் மனதை கவருகிறமாதிரியில், தோழர் இளைய நேரு ''பொதுவுடமை திட்டமென்றார்''. இது சட்ட திட்டத்திற்கு உற்பட்டதா உட்படாததா? என்று பேசிக்கொண்டார்கள். அதற்குள் சில பிரபுக்களிடம் பணம் பறித்து, பிரபுக்களாக வாழ்பவர்கள் பொதுவுடமை என்றால், காங்கிரஸ் இயக்கத்தில் பணக்காரர்கள் மில் சொந்தக்காரர்கள் இவர்கள் பிரிந்து விடுவார்கள் என்று கண்டிக்க புரப்பட்டதைக்கண்டதும், புதிதாக பணக்காரனையும், பாமர மக்களையும், ஒரே வார்த்தையில்ஏமாற்றுகிறமாதிரியில்'அபேதவாதம்' என்றபெயரைச்சேர்த்து இருக்கிறார்கள்.

ஆதலால் அன்சாரி பேரைப் பார்த்து முஸ்லீம்கள் ஏமாந்து விடக்கூடாதென்று நாம் சொல்வதைப்போலவே, அபேதவாதம் என்ற பதத்தைப் பார்த்ததும் தமிழ் நாட்டு பொது ஜனங்களும், சிறப்பாக இந்நாட்டின் க்ஷேமத்தில் மூழு ஆசை கொண்ட தமிழ் நாட்டு காங்கிரஸ் தோழர்களும், ஏமாந்து விடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்யவிரும்புகிறோம்.

இனி நமது மாகாண சுயராஜ்யகக்ஷிபேரால் இப்பொழுதே பார்ப்பன கூலிகள், பார்ப்பன தலைவர்கள், சட்டசபைத் தேர்தலுக்கு பிரசாரம்செய்ய ஆரம்பித்துவிட்டதால், அடுத்த தேர்தலில் இந்திய சட்டசபைக்கு இம்மாகாணப் பிரதிநிதியாக போக யார் யார் தகுதியுடையவர்கள் என்பதை முடிவுசெய்வதற்குள் இன்றைய சுயராஜ்யக்கக்ஷி பிரசார கூலிகளின் வீண்கூச்சலில் ஏமாறாது உஷாராக இருக்க வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

## மே தினம்.

**தோழர் ஏ. இ குணசிங்கம் தலைமை வகித்தார்.**

அகில இந்திய தொழிற் சங்கத்தின் ஆதரவில் கொழும்பில் மே தின வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஓர் பிரமாண்டமான ஊர்வலம் பேலிலிருந்து புறப்பட்டுப் பல வீதிகளின் வழியாகச் சென்று விக்டோரியா பார்க் போய்ச்சேர்ந்தது. அங்கு பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. இ.குணசிங்கம் தலைமையில் பலர் பேசினார்கள். பின்னர் பல வினோதங்கள் நடந்தன.

# வாலிப சைதன்னியம்

(எஸ். கே. சாமி)

ஆழி சூழ் அவனியின் கண் எத்திசை நோக்கினும் அத்திசை யெல்லாம் எப்பொழுதும் இலங்குவதும் எல்லோருடைய ஏக மதிப்பிற்கும் ஏற்றதுமாய் விளங்குவதும் சைதன்னியமொன்றேயாமென்பது மறுக்கப் பாலதன்று. எங்கு நே:க்கினும் மெல்லிளந்தென்றல், இன்ப வடிவு, இயற்கை வனப்பு, அதிமனோஹரமாகிய அதிகாலை வேளை கதிரவன் தோற்றம்............ இவையனைத்தும் சைதன்னியத்தின் தனிச் சின்னங்களாகும்.

சை;தன்னியத்திலிருந்து ஞாலம் தோன்றியது. சைதன்னியத்திலேயே இலங்குகின்றது. இறுதியில் அதிலேயே பரிணமிக்கின்றது. சைதன்னியத்தின் ஓர் பாகமாகவே ஒளியை கருதவேண்டும். பிரேமம்அல்லது அன்பின் ஒளியின்உருவமேயாகும். பிரேமத்தின் உணர்ச்சியே விடுதலை. அகில உலக அபிமானத் தத்துவ ஞானியாரிலொருவராகிய லோட்ஸ அவர்கள் பிரபஞ்சத்தின் பிரதானப் பொருள்களாக நான்கு விஷயங்களை குறிப்பிட்டுள்ளார். அதாவது உயிர், ஒளி, பிரேமம், ஆணை. இந் நான்கின் இருப்பிடமாகவே சைதன்னிபத்தை எண்ணவேண்டுவது இன்றியமையாததாகும்.

யோசிக்குந் தன்மை படைத்திராத மக்களிடையே சைதன்னியம் மழுங்கிக் காணுமென்பது திண்ணம். பகுத்தறிவை உபயோகித்து எக்காரியத்திலும் யோசனை செய்து முடிவுக்கு வரவேண்டுவதே புத்திசாலித்தனமாகும். அப்பொழுதுதான் சைதன்னியத்தின் உண்மை வன்மையை உணர இயலுமென்பது உறுதி. சைதன்னியத்தின் பிரதிநிதியாகவே மக்களைக கருதவேண்டும். சைதன்னியத்தின் பூரண நிலைமையே வாலிபப் பருவம். வாலிபப் பருவத்திலேயே மக்களுக்கு உயரிய உன்னத நிலைக்கேக வேண்டுமென்ற பேரவாத் தோன்றுவது இயல்பு. வயது ஆக ஆக மரணத்தைக் குறித்த பயம் வளர்ந்து இயல்பிலேயே ஆண்மைபடைத்த உள்ளத்தை மாசடையச் செய்துவிடுகின்றது. ஆகவே வயோதிகரிலிலங்கும் சைதன்னியத்திற்கு ஓர் வித ஆட்டம் காணப்படுகின்றது. இயற்கையாகவே மரணத்தை மாற்றுவதற்கெவராலும் இல்லாத நிலைமையில், உலகம் இலங்குகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், மரணத்தை நினைந்து அச்சமுறுவது வயோதிகர்களுக்கே வாலிபரைவிட மிகுதியாகவிருக்கின்றது.

கருங்கல்லிலும், கடலிலும், வானத்திலும் தமது சக்தியை நடாத்திச் செல்லும் மனிதனுக்குக் கதிரவன் முன் கண்திறந்து நோக்க முடியவில்லையென்பது கண்கூடு. காரணமென்ன? சூரியன் சைதன்னியச் சமுத்திரமாகும். வாலிபத்திற்குப் பல நன்மைகளும், சில தீமைகளுமுண்டென்பதை கூறாமலிருக்க முடியாது. இச் சந்தர்ப்பத்தில் ஜே. எஸ். கஸின்சு கூறியவைகளைக் குறிப்பிடுவது நலமெனக் கருதுகிறோம். வாலிபம் அவிவேகமும், ஆத்திரமும் நிரந்ததாகும். ஆனால் பரந்த இருதயமும் ஆராயுந் தன்மையுமுண்டு. கட்டுப்பட்ட வாலிபப் பருவம் கேடு சூழ்வதாகும். விடுதலை பெற்ற யௌவனத்திற்கு அரிய பெரிய காரியங்களை நிர்வகிக்க- வல்லமை யுண்டு.,, வாலிபர்களின் சைதன்யத்தை அடிமைப் படுத்து வதினாலேயே குருட்டு நம்பிக்கைகள் கூத்தாடுகின்றன. அனாசாரங்கள் ஆர்பாட்டம் செய்கின்றன. ஆதியில் சமூகத்தையும் இறுதியில் நாட்டையும் கேடு சூழ்வதற்கு ஏது வாகின்றது. அரசியல் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யாயிலங்கும் இவ்வித நம்பிக்கைகளெல்லாம் எழுந்ததின் மூலகாரணம், அதின் யௌவனத்தை கட்டுப் படுத்தினதேயாமென்பதை தோழர்கள் உணர வேண்டும்.

தற்பொழுது இந்தியாவின் நிலைமை, எந்நாட்டாரும் இரங்க தக்க இழிவான நிலையிலிருக்கின்றதென்பது யாவருமறிந்ததே. காரணம் என்ன? இந்தியர் ஆண்மையை யிழந்ததே யாமென்பதில் அணுவளவும் ஐயமின்று. எப்பொழுது ஆண்மையென்னும் மனித உரிமையை இழந்தோமோ, அன்று முதல் நாம் பல வழிகளிலும், பல துறைகளிலும் ஒதுக்கப்பட்டு அவதியுற்றோம். ஆண்மையிழக்க தக்க வழிகளிலேயே பிறரால் ஆட்டுவிக்கப் பட்டதை கண்மூடித்தனமாக இன்றும் நடந்து வருகின்றோமென்பதை நோக்கும்போது எந்த பகுத்தறிவாளியின்மனம் நோகாது என்று தான் கேள்க்கின்றோம்.

"நமது படிப்பு முறை பயன் பெறாததாகும். தற்கால கல்வி முறை வாலிபர் சிந்தையில் புரட்சி தோன்றுவதற்கு தகுந்ததாயில்லை. பள்ளிப்படிப்பு குழந்தைகளை மரணத்திற்கே தயாரிக்கின்றது. இந்திய யுவர்கள் சவஅறைகளிலேயே இன்று அவாகளது ஜீவிதலக்ஷியத்தை காண்கின்றனர். இஃது பெருத்த அன்னியாயமாகும்." என்று வில்பிரெட் வில்லக் கூறியிருப்பதையும் காண்க.

உயர்ந்த எண்ணங்கள் வேண்டும். உன்னத லக்ஷியங்களை மேற்கொண்டொழுகுதல் வேண்டும். அடிமையுள்ளம் படைத்தவனும், கோழையும் உண்மையாக மனிதனல்லவென்பதை சித்தத்திலிருத்த வேண்டற் பாலது. ரோமியன், ரோலண்டு அவர்கள் இளைஞர்களை நோக்கி இயல்புவதை காண்க. "இளைஞர்களே! நீங்கள் எங்களை கடந்து செல்ல வேண்டும். எங்களை உங்களது பாதங்களினால் மிதித்து மீதேறி முன்னேற வேண்டும். எங்களை விட எத்துறையிலும் உயர்ந்தோராக திகழ்மின்!"

வாடிய இலைகள் இளம் இலைகளுக்கு இடம் கொடுப்பது இயற்கையாகு மன்றோ! அது போலவே வயோதிகர் வாலிபர்களுக்கு இடம் கொடுத்து நலம் பெறசெய்ய வேண்டுவதே அவர்களது அரிய கடமையும், இயற்கையின் படிப்பினையுமாகும். சுழல்கின்ற இப்பெரும் ஞாலத்தின் கண் சதா இயங்குவது யுவ சைத்தன்னியமேயாம்.

பணிவு, அடக்கம், இவை வேண்டதற் பாலதே. பெரியோரிடம் வணக்கமாயிருத்தலும் அவசியமே. ஆனால் அவ்வருங்குணங்கள் அடிமைக்கயிற்றினால் பிணைக்க ஒரு பொழுதும் இடம் கொடுக்கக் கூடாதென்பதை அழுத்தம் திருத்தமாக ஈண்டு குறிப்பிடுகிறோம். உலக முன்னேற்றம், எதிர்ப்பிலேயே அடங்கியுளது என்ற வெல்டு பெரியாற் அமுத மொழிகளை காண்மின். அமைதியை எல்லோரும் ஆசைப்படுகின்றுரென்றாலும் அமைதி நீண்டநாளாக இயங்குவதை காணமுடியாது. ஒருவேளை அமைதி யாங்கணும் நிலவிய போதிலும், ஒரு பெரும் போர் சதா, நடந்துகொண்டே யிருக்கும். இப்போருக்கு ஓய்வு ஒரு நாளுமில்லை. அப்போரின் இருதரப்பினர், வயோதிகர்களும், வாலிபர்களுமே ஆவர். கோள் சொல்லுங்கள், ஆனால் உங்கள் வார்த்தைகளுக்கு உயிர் வேண்டும், என்று ஸொற ஸாற்றர் கூறியிருப்பது ஊன்றி நோக்கதக்கதாகும். இக்கருத்தையே கவிஞர் ஹியுகோ உணர்ச்சியிருந்தால் மட்டுமே முன்னேற முடியும், என்று கூறியுள்ளார். விவேகானந்தரும் இக் கருத்தை கொண்டே இவ்வாறு இயம்பியுள்ளார் புண்ணியம், பாவம், என்று கூறுவது முறையே சக்தியும்,கோழைத்தனமுமாகும்"

ஆகவே மக்களாய் பிறந்த ஒவ்வொருவரும் உணர்ச்சியுடன் வாழ்தல் வேண்டும். உணர்ச்சியின்றேல் உயிரில்லை. ஒளியில் 2 விடுதலையில்லை, வெற்றியில்லை. சுருங்கக் கூறின் ஒன்றுமேயில்லை. பயமென்னும் பேயை பிளந்து, உதிரம் குடித்து ஏப்பமிடவேண்டும் என்ற ஆங்கிலேய நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரின் அமுதமொழிகளை காண்மின். மாற்றத்தில்மனதை செலுத்தவேண்டும். ஆனால் யோசனையின்றி ஒன்றும் புரியக் கூடாது. பழக்கம் என்றதினால் உண்மையாயிருக்கு மென்ற மூட எண்ணத்தை முறியடித்தல் வேண்டும். இவ்வருங்குணம் இயல்பாக இளைஞர் உள்ளத்தில் தோன்றுவது இயல்பு. அவ்வெண்ணத்தை அடக்க முயற்ச்சிகொள்ளும் முதியோர்கள் நாட்டை கெடுக்க வந்த கோடாரி காம்புகளென்பது திண்ணிதில் துணியதக்கதே.உணர்ச்சி, உயிர்அன்பு விடுதலை வெற்றி அல்லது மரணம் இவ்வருங்குணங்கள் இளை

# தாமஸ் பெயின்

## அமெரிக்காவின் சுதந்திர வீரர்.

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

இப் பூவுலகின் கண் பல வகைப்பட்ட நன் மலர்கள் தோன்றுகின்றன. ஆனால் அம் மலர்களின் தன்மையை மனித வர்க்கம் நன்குணர்ந்து அதை சரியான முறையில் பயன்படுத்துவதில்லை. நாளடைவில் அம் மலர்கள் மடிந்து விடுகின்றன. இவ் வகையிலேயே மனித சுதந்திர விருக்ஷத்தினின்றும் தோன்றின ஓர் அரும் பெரும் மலரே 'தோமஸ் பெயின்' ஆவர். இம் மகானை கத்தோலிக்க பிரசங்க மேடைகளிலும், துண்டு பிரசுரங்களிலும், பத்திரிகைகளிலும், இன்னும் கூறுவதற்கு முடியாத வகையில் பலமாகக் கண்டித்திருக்கின்றார்கள். இவர் யார்? இவர் ஓர் பாதிரியின் புதல்வனாகத் தோன்றினார். இளமையிலே தம் மைந்தனை ஓர் பாரதியாக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் 'பைபிலை' நன்கு கற்பித்து வந்தனர். ஆனால் கடைசியில் என்ன பயன்? தாய் தந்தையர்கள் எவ்வளவு தூரம் தமது கருத்தில் ஆசை கொண்டார்களோ அவ்வளவும் பெரும் ஏமாற்றத்தை அடைந்தனர். தோமஸ் பெயின் பைபிலை நன்கு கற்றுக் கொண்டதும் ஒப்புயர்வற்ற ஓர் பகுத்தறிவாளியானார். அதன் பின்னர் "பகுத்தறிவு காலம்" என்றதோர் அரிய நூலையும் இயற்றினார். இவைகளினாலேயே கத்தோலிக்க கண்பர்களிடமிருந்து இவருக்கு கணக்கற்ற பெருந் தீங்குகள் விளைதன.

பெயினின் வாழ் நாடகளை நான்காக பிரிக்கலாம். முதல் 38வருடங்கள் தமது சொந்த நாடாகிய இங்கிலாந்திலும், இரண்டாவது 15 வருடங்கள் அமெரிக்காவிலும் மூன்றாவது 15 வருடங்கள் இங்கிலாந்திலும், பிரான்சிலும், நான்காவது ஏழு வருடங்கள் அமெரிக்காவிலுமாக செலவழித்தார்.

தமது 72-வது வயதில் காலகதி அடைந்த இம் மகான் உலகிற்கு என்ன நன்மை விளைவித்துள்ளது என்பதை சற்று கவனிப்போம். அமெரிக்கர் தங்களது சுதந்திர போரை துவக்கினது 1776-ஆம் வருடம் ஜூலைமாதம் நான்காம்தேதி யாகும். பெயின் "சுதந்திரம் அனுபவிக்காத எங்காடிருக்கின்றதோ—அந்நாடே எங்நாடு" எனகூறின உலக நண்பர் 1775-ல் அமெரிக்காவுக்குச்சென்று ஆங்கு அவர்களின் சுதந்திரத்திற்காக அந்தரங்கமாக உழைத்து வந்தார். அமெரிக்காவின் சுதந்திரத்தைக்குறித்து கணக்கற்ற துண்டுபிரசுரங்களை பிரசுரிதது வழங்கினர். தோமஸ் பெயினின் துண்டு பிரசுரங்களைக்குறித்து அவரது பகிரங்க விரோதி ஒருவர்கூறுவதாவது:—"Comonsense and the crisis" என்ற நூலின் ஆசிரியரது பேனாவே வாஷிங்டனுடைய துபபாக்கியைவிட பிரிட்டனுக்கு எதிர்ப்பதற்கு மிகக்கஷ்டமாக இருந்தது" என்கிறார் பெயின் அமெரிக்கா இராணுவத்தில் சேர்ந்து பல அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார்.

அமெரிக்கா சுதந்தரப்போரில் வெற்றியடைந்த நான்கு வருடங்களுக்குப்பின் பெயின் இங்கிலாந்துக்குத்திரும்பினர். ஆங்குதான் அவர்து நூல்களில் முக்கியஸ்தானத்தை பெறும் மனிதனது அவகாசங்கள் (The Right of Man) என்ற நூலை இயற்றினர். இங்கிலாந்திலுள்ள முதலாளி வர்க்கத்தினர் பாமரர்களான தொழிலாளர்கண் செலுத்தும் கொடுங்கோன்மையை ஒழிப்பதற்கே இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூல் அன்று ஐரோப்பியாவில் வழங்கி வந்த மிக்கிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பெரியாரின் நூலைவாசித்து வந்த பிரஞ்சுக்காரர்கள் அவரைஆதரித்து வந்தனர். இதன் பயனாக அவர்களுடைய நாஷனல் கோன்வகேஷனில் இவரை ஒரு அங்கத்தினராகதேர்ந்தெடுத்தனர் இவர் அதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஆனால்சுதந்திர சிந்தனையாளர்களும் அரசியல் தலைவர்களும் அனுபவிக்க வேண்டிய பெரும் பலன்கள் அவரையும் அனுபவிக்கத்தூண்டிற்று. அச்சமற்ற நெஞ்சுடன் ஆணித்தரமான தமது அபிப்பிராயங்களைவெளிப்படுத்தும் பெயின் 'லக்ஸம்பெர்க்' ஜயிலில் ஒரு வருட கடுங்காவலில் தமது வாழ்நாட்களைபோக்கினர். 1802ல் அவர் மீண்டும் அமெரிக்காவை அடைந்தார் அமேரிக்கா சுதந்திரத்திற்காக தன்னலத்தைப் பாராட்டாமல் பொது ஈலத்தைக்கோறின பெயினுக்கு அமெரிக்காவினின்றும் இங்கிலாந்திற்கு திரும்புகையில் மக்களது ஆராதன மூர்த்தியான பெயினுக்கு என்ன வேகுமதி கிடைத்தது? வெகுமதியாக அமெரிக்காவினின்றும் கிடைத்தவைகள் அவமானமும் ஆக்ஷேபனைகளுமாகும் இப்படிசெய்தவர்கள் அரசியல் வாதிகளோ சுதந்திரசிந்தனையாளர்களோ அல்லது அந்நாட்டு பெரியோர்களே அல்லர். ஆனால் அந்நாட்டு புரோகிமவர்க்கமும் அவர்களுடைய ஆட்களுமாவார். கிருஸ்துவமதத்தை அலங்கோலப்படுத்தும் பைபிலில் உள்ள தவறுதல்களை அச்சமற்ற நெஞ்சுடன் வெளிப்படுத்தின அம்மகான் பிரங்கியைவிட பேனாவைக்கொண்டு அமெரிக்காது சுதந்திரத்திற்கு போராடின அப்போர்வீரன் மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்கும் மதத்தின் நாசத்திற்குமாக உழைத்த அவ்வறிஞன் தமது கொள்கைஜாக பட்டபாடு என்ன? அனுபவித்த துன்பங்கள் எவ்வளவு? கணக்கிலடங்கா? உத்தமர்களாகிய இவ்வறிஞர்களை வாலிபஉலகம் ஒருக்காலும் மறுக்கமுடியாது என்பது நிச்சயம்.

---

ஞர்களின் முத்திரை மொழிகளாய் திகழவேண்டும். கோழைத்தனத்தை யாங்கணும் தலையெடுக்க வொட்டாமல் வெட்டி வீழ்த்த இளைஞர்கள் கங்கணம் கட்டி மார்தட்டி வம்மின்! பகுத்தறிவுக்கொவ்வாத பண்டைப் பழக்க வழக்கங்களை படீர், படீர் என்று பறித்தெடுத்து காற்றில் பறக்க செய்மின்!

இந்தியாவின் நன்னிலைக்கும் ஏன் உலகவிடுதலைக்கும் மக்கள் எல்லோரின் இன்பவாழ்வுக்கும் ஏற்ற வழியிதுவே. வாலிப சைதன்னியம் எண்திசையும் வளம் பெற்று வளர்ந்தோங்குக!!


மிகப்பெரிய தருமம்! மிக்க தனம் பெறச் சமயம்!!

நாடார் மஹாஜன சங்கம்

ஏழை மாணவர்

ஸ்காலர்ஷிப்

3-வது லாட்டரி.

1934-ஞூ ஜூன்-மீ 10-தேதி பிரைஸ் எடுக்கப்படும்.
சீட்டொன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம்
ஒரு லக்ஷம் சீட்டுகள்.

22 சீட்டுகளடங்கிய புஸ்தகம்
கிரயம் ரூபாய் 20.

35,610 ரூபாய் 6,000 பிரைஸ்களாகக் கொடுக்கப்படும்.

1-வது பிரைஸ் ரூ. 5000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ. 2000 | 4-வது பிரைஸ் | ரூ. 500 |
| 3-வது ,, | ரூ. 1000 | 5-வது ,, | ரூ. 500 |

6-முதல் 15-வரை பிரைஸ்கள் ரூ. 250 வீதம்.


(மற்ற பிரைஸ்களின் விபரம் புஸ்த்தகத்தில் பார்க்க.)

ஆறுயிரம் பிரைஸ்கள் கொப்பதால் 18 புள்ளிகளில் ஒருவருக்குப் பிரைஸ் கிடைப்பது திண்ணம்.

மற்ற விபரங்களை காரியதரிசிகளுக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

ஆபீஸ்:—
34, வெங்கலக்கடைத்தெரு,
மதுரை.

பெ. சி. சிதம்பர நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
காரியதரிசிகள்.



சென்ற ஏப்ரல் மாதம் 29ந் தேதி நாகையில் கூடிய இந்திய வாலிபர் சங்கத்திற்கு டாக்டர் பி. வரதராஜுலு தலைமை வகித்தார். டாக்டர் நாகை ஸ்டேஷனில் இறங்கியதும் அவரை வாலிபர் சங்கத்தார் ஆடம்பரத்துடன் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

(போட்டோ, ஜி. வி. நாயுடு, நாகை)

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ருன். அதுவும் போதாமல் மலந்தேடியலையும் பன்றிகளைப்போல குச்சுக்காரிகள் தெருவெல்லாம் சுற்றி சுற்றியலைகிருன். இப்படியிருந்தும் சட்டகர்த்தாவாகிய மனு பிர்ம்மா. பெண்களை விபசாரதோஷத்தோடே யே பிறப்பித்தார் என்று திருவாய் மலர்ந்தருளுகிருர். குடத்திலும் குதிரையிலும் மீனிலும் தூணிலும் செடியிலும் கொடியிலும் பிள்ளைகளைப் பெற்றிருக்கும் ஆண்கள் பெண்களை விபசாரிகளென்பது மகாபாவமல்லவா. அயோக்கியத்தனமல்லவா. இளமை மணம், விதவைக் கொடுமை. கோஷாமுறை, பொட்டுக்கட்டுதல் முதலியவைகளை மேலே காட்டிய உதாரணங்களிலிருந்து பெண்களும் மனிதர்கள் தானென்றும் அவர்களுக்கு விருப்பு வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுண்டென்றும் ஆண்களுக்கு மதிப்பதாகத்தெரிகின்றதா தெரியவில்லையா யென்ருல் உணர்ச்சியில்லாதவர்களாகத்தானே பாவிக்கப்படுகின்ருர் களென விளங்குகின்றது.

உணர்ச்சியில்லாதது பிணம்தானே ஆகவே மனிதத்தன்மையற்ற ஆண்களென்பவர் கண்ணுக்குப் பெண்கள் பிணமாகத்தானே காணப்படுகின்ருர்கள்.

சகோதரர்களே.

உலகப்போக்கைக்கண்டு பெண்ணுரிமைப்போராட்டத்தை யுணர்ந்து பெண்களும் மனிதர்கள் தானென்றும் அவர்களைச் சுதந்திரப்போக்கில் விட்டு விடுங்கள், இன்றேல் அயலாரை சுதந்திர வீரர்கள் எதிர்ப்பது போலவும், மதக்கொடுமையை சுயமரியாதை வீரர்கள் எதிர்ப்பதுபோலவும் ஆண்களைப் பெண்கள் எதிர்க்கும் காலம் விரைவில் வந்துவிடுமென்று எச்சரிக்கைபண்ணி எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

---

[8-ம்பக்கத் தொடர்ச்சி]

தை இயக்கத்தினர்கள் பகைமையைவளர்க்கும் வசனங்களையும் சொற்களையும் உபயோகிக்கக்கூடாதென விளக்கிக்காட்டியதைக் கேட்ட அன்பர்கள் யாரும் வைசு அவர்களின் பெருந்தன்மையை எளிதில் மறந்து விட முடியாது.

மேலும் தோழர் வைசு அவர்களைப்பற்றி அச்சந்த விர்த்து ஆண்மை கொண்ட பாரதியார் அவர்கள் பாடியிருக்கும் பாட்டுகள் பல. மனிதர்கள் நிறைபோட்டு இடைகூறுவதில் நிபுணரான பாரதியாரின்சொற்கள் தோழர் வைசு அவர்களின் ஆழத்தைமட்டிலல்லாது கனத்தையுங்கூருதோ!

"பல்லாண்டு வாழ்ந்தொளிர்
காணுடுகாத்தான்
நகர் பரிதி போன்ருய்
சொல்கண்ட புலவோர்
தமுயர்த்துணையே
தமிழ்காக்குந்துரையே
வெற்றிவில்லாண்ட
இராமனைப்போல்
நிதியாலும் இராமனைப்போல்
விளங்குவாய் நீ
மல்லாண்ட திண் தோளாய்
ஷண்முக நாமம் படைத்த
வள்ளர்கோவே"

"பாரத தாணுதிலதியென நினையே
வாழ்த்திடுவோர் பரிதிலுள்ளோர்
ஈரமிலா நெஞ்சுடையோர்
நினைக்கண்டால்
அருள் வடிவ மிசைந்து நிற்பர்
நேரறியா மக்கள் எல்லாம்
நினைக்கண்டால்
நீதி நெறி நேர்ந்துவாழ்வர்
யார் அறிவார் நின்பெருமை
யார் ஆனை
மொழியுடை மைக்கு வல்லார்"

மற்ருேர் கவிஞர்

சீறி ஒரு கோடையிடி சென்று பல அச்சமொழி கூறிவிழுந்தாலும் தம் கொள்கை யினின்று எள்ளளவும் மாறுபடா தீர்க்க மனங்கொள் வைசுவிற்கு கூறுபட எத்தனிக்க கோடிபோர் திருந்துவரோ"

என்றும் பாடியிருக்கிருர்.

தோழர் வைசு அவர்களின் ஆழமும் கனமும் விளக்க நாயனுர் குறிப்படும கருமமெனுங்'கட்டளைக்கல் இன்னும் உண்டு ஆனுல் இரங்கூன் இருட்டறையில் இருந்து கொண்டு வாயாடித்தனமாய் வசைபாடி விதரணையற்றகுழாத்தினரிடம் மலிவானப் புகழைத்தேடி அந்த அற்ப பலத்தில் உயிர் வாழ விரும்பும் பத்திரிகைகள் அதன் ஆசிரியர்கள் அவர்களுக்குத்துணைவோர்களின் ஆழத்தை விளக்க நாதியுண்டானுல் அது தோழர் வைசு அவர்களின் சாலைக்கவ்விப் பிடித்திழிக்குமா? அல்லது அக்காலின் கீழ் நசுக்குண்டு அலறுங்காலத்து ஓலந்தானு என்ற உண்மைப்புலப்படும். அதன் பின்னர் தானே ஆழந்தெரியாமல் காலைவிட்டது யாருக்கு ஆபத்து என்பது தெரியவேண்டும்?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது. இஸ்லாத்தைப்பற்றியும், கிறிஸ்து மதத்தைப்பற்றியும், புத்த மதத்தைப்பற்றியும் இவருக்கு என்ன தெரியும் என்றுதான் கேட்கின்றேன்.

சைவசமயத்திற்கு ஒருஸ்திரமான கொள்கையோவேதமோபரந்த நோக்கமோ இல்லாதிருப்பதால் தான் அவர்கள் தங்கள் மதத்தைப்பகிரங்கமாய் பேசமுன்வருவதில்லை. கிறிஸ்தவர்களைப் பாருங்கள் ஆரிய சமாஜிகளைப்பாருங்கள் எவ்வளவு தைரியமாய் தெருக்களில் நின்று கொண்டு தங்கள் மதத்தை பற்றித்தெளிவாய்க்கூறிபிறமதங்களிலுள்ளவர்களைத் தங்கள் மதத்திற்குஅழைக்கின்றார்கள்அவர்கள் மதத்தில் எவ்வித கொள்கையிருப்பினும் மதத்தில் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்களைப்புரட்டி காலத்திற்கேற்ற பொருள்கொண்டு அதை பொதுமக்களிடம் கூறுவதனால் தான் அவர்கள் சொற்பொழிவை ஜனங்கள் கேட்டுக்கொண்டு போகிறார்கள். நமது முதலியார் போன்றவர்கள் தெருக்களில் நின்று கொண்டு ஆதித்திராவிடர்கள் எத்தகைய ஒழுக்கமுடையவர்களாயினும் சிவதீக்ஷை பெற்றவர்களாயினும் ஆலயத்தில் புகக்கூடாது, வேளாளசாதியில் பிறந்தவன் ஒருவன் சைவம் என்பது என்ன என்று அறியாவிடினும் கள் சாராயம் குடிப்பவனாயினும் வேசி வீடே கதியென அங்கேதான் வாழ்நாளைக் கழிப்பவனாயினும் விதவைப்பெண்கள் பலரைத் தாராளமாய் கற்பழித்து சிசுக்கொலை பல புரிந்தவனாயினும் வேறு பல அயோக்கியத்தனங்கட்கு ஆட்பட்டவனாயினும் ஆலயத்தில் புகலாம் என்றால் அவர்கள் பொது மக்களால் உதைப்பட்டு மானம் மரியாதை இழந்து தான் வரவேண்டியதிருக்கும். பலவீனமான பகுத்தறிவிற்கொவ்வாத கொள்கைகளையுடையவர்களாயிருப்பதனால் சைவர்கள் சந்திலும் பொந்திலும் கோயிலுக்குள்ளும் தங்கள் பக்தர்களிடத்தில் தம மதப்பெருமை பேசிவிட்டு செல்லுகிறார்கள்.

திரு முதலியார் போன்ற வைதீகப்பிடுங்கலாலே தான் என் போன்ற சைவர்கள் பலர் நாஸ்திகராய் மாறிவிட்டார்கள். இன்று நாஸ்திக இயக்கத்தை தமிழ் நாட்டில் தீவிரமாய் பரப்ப முன்வந்து நிற்பவர்களில் நூற்றுக்கு எண்பது நல்ல சைவர்களின் மக்களேயாவர் சைவர்களின் பேச்சில்காண்பது ஒருவிதமான சைவம். அவர்கள் வீட்டில் உண்பது ஒருவிதமானசைவம். அவர்கள் செயல்வேறு ஒரு விதமான சைவமாக இருக்கிறது சைவத்தில் ஒரேகடவுள் என்று பிரசங்கத்தில் கூறுவார்கள் இக்கோயிலில் பாருங்கள் எத்தனை நூற்றுக்கணக்கான தெய்வங்கள் (பதுமைகள்) எத்தனை வேடிக்கை புருவங்கள் அசங்கியமான கதைகள் சிவபெருமானுடைய ஆண்குறியைத்தான் சைவர்கள் "லிங்கம் என்று வைத்து வணங்குகிறார்கள். லிங்கம் என்றால் ஆண் குறி என்றே பொருள். ஆவுடையார் என்பது பெண் குறியாகும். இன்னும் சைவ தெய்வங்களின் கதைகளே அம்மம்மா செப்பத்தரமன்று. நான் போக்கிபனே எங்கள் அக்காள் தான் விபசாரி என்று கூறியதற்கொப்ப ஓர் சைவத்தலைவர்கள் சைவர்கள் கூறும் சிவலிங்கம் பல தத்துவப்பொருளைக் கொண்டது ஸ்மார்த்தர்கள் வணங்கும் லிங்கம் சிசனம் என்னும் ஆண்குறியென்று கூறுகின்றார் நீங்கள் எங்காவது சைவர்கள் வணங்கும் சிவலிங்கம் என்றும் ஸ்மார்த்தர்கள் வணங்கும் சிவலிங்கம் என்றும் பிரித்துக்காட்ட முடியுமா? இக்கூட்டத்தார்களும் ஒரேவிதமான சிவலிங்கத்தைத்தானே வணங்குகின்றார்கள் இன்னும் இதைவிளக்கினால் பெரும் ஆபாசமாய் முடியும்.

சைவர்கள் என்போர் தங்களைப் பெரும் ஆஸ்திகர்களைப்போல் பேசுவார் நடிப்பவர் அவைகளெல்லாம் வெறும் பித்தலாட்டமே கோர்ட்டில் சர்வவல்லமையுள்ள கடவுள் முன்பு சத்தியமாய் சொல்லுகிறேன் என்று தான் சத்தியம் பண்ணி வாக்குமூலம் சொல்லுகிறவர்கள் எவராவது உண்மைசொல்லுகிறார்களா? என்று யோஜித்துப்பாருங்கள். எத்தனை சைவர்கள் கூற்றுப்பொய்க் கூற்று என்று கோர்ட்டுகளில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது சைவம் அன்புநெறி, சைவர்கள் அன்பே உருவாய் உடைய வர்கள் என்று கூறப்படுகிறது. இவைகளெல்லாம் வெறும் ஹம்பக் ஆகும் (கேளுங்கள் கேளுங்கள்!!) சைவர்களுக்கு ஜீவகாருண்யமிருக்குமானால் கோடிக்கணக்கான ஆதிதிராவிடர்களை மிருகங்களிலும் கேவலமாய் நடத்துவார்களா பிறர்நடத்தப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். எத்தனை மக்கள் பசியால் வாடி வதங்குகின்றார்கள் எத்துணை குழந்தை பட்டினியால் பாலின்றி இறந்து போன தாயின் முலையைச்சுவைத்து ஒன்றுமின்றி சாகின்றனர். எத்தனை தெருக்களில் நாயுடன் போட்டி போட்டுக் கொண்டு எச்சிலைப் பிடுங்கித்தின்று வயிற்றை நிரப்புகிறார்கள். இதை எல்லாம் ஜீவகாருண்ய சமயத்தைச்சார்ந்த ஒருவன் எவ்வாறு பார்த்துக் கொண்டிருக்க முடியும் பொறுத்துக்கொண்டிருக்கமுடியும் என்று தான் உங்களைக் கேட்கிறேன். சைவம் தோன்றிய காலமுதல் இந்நிலை இருந்துகொண்டுதானிருக்கிறது இதுவரைசைவமோ சைவர்களோ ஏதாவது செய்திருக்கிறார்களா என்று அவர்களை அன்புடன் வினவுகிறேன் மட்டிடம் காக்கையிடம் சைவர்கள் அன்புகாட்டுவார்களேயொழிய மனிதனிடம் ஒருபொழுதும் அன்புகாட்டுவதில்லை.

இக்கழகத்திற்கு சக்தியாகிய விசாலாட்சியின் பெருமையைப் பற்றிக்கூறி பெண்ணின் பெருமையைப்பற்றிக் ஒருபெரியோர் பேசினார். ஆனால் இதுவெறும் பித்தலாட்டமாகும். சைவப்பெண்ணுக்கு என்ன உரிமையைக்கொடுத்திருக்கிறது பெண்களுக்கென்று ஒருசைவ கல்லூரியைக்கூட நிறுவவில்லை இக்கூட்டத்திற்கு குடும்பசமேதராய் அழைப்பு அனுப்பட்டும் எந்த சைவனாவது பெண்களை அழைத்து வந்திருக்கிறானா பாருங்கள் ஒருச்சமயம் இவர்களுக்கு மனைவிமக்களோசகோதரியோ இராது என்றுகூட நான் நினைக்கிறேன் ஒழுக்கம்! ஒழுக்கம்!! என்று இச்சைவர்கள் தம் வாய்கிழிய கத்துவார்கள், ஆனால் இச்சைவத்தலைவர்களின் ஒழுக்கம் சந்திசிரிக்கின்றது. இந்த சமயமோ அல்லது வேறு எந்த சமயமோ மனிதனை ஒழுக்கம் உடையதாக செய்யவில்லை. செய்யவும் முடியாது.

ஆனால் தோழர் காரல் மார்க்ஸ் இவர்களால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஓர் நாஸ்திக இயக்கமாகிய பொதுஉடமையியக்கமாகிய போல்ஸ்விக் இயக்க ரஷ்யநாட்டிலுள்ள மக்களை எத்துணை ஒழுக்க முடையவர்களாகச் செய்கிறது. ரஷ்யாவில் விபசாரம் ஒழிந்து பொய்யும் களவும் மாய்ந்தது. அந்நாட்டுமக்கள் நாளைக்கு எதை உண்போம் எதைச்செய்வோம் என்று கவலைபற்று வாழ்ந்து அல்லற்படும் துயரத்தை அறவேமாற்றி விட்டார்களே உலகிலுள்ள எல்லாநாடும் ரஷ்யாவைக்கண்டு போற்றிப்புகழ்வதோடு அஞ்சவும் செய்கிறதே, நாஸ்திக ரஷ்யாவில் போலீசும் பட்டாளமும் சிவில் கிரிமினல் கோர்ட்டுகளும் இருந்த இடந்தெரியாது போக சைவர்கள் மிகுந்த இந்த தமிழ் நாட்டிலே கோர்ட்டுகளும் போலீஸ்காரர்களும் கொள்ளைக்கூட்ட வக்கீல்களும் பெருகிவருவது ஏன் என்று யோசித்துப் பாருங்கள். அப்பொழுது இந்த சைவர்கள் யோக்யதை சைவத்தின்பேடித்தனமும் உங்கட்கு விளங்காமற்போகாது.

இவைகள் நாங்கள் கூறுவது அன்று. இன்று உலகப்பெரியார்களாகக்கருதப்படும் தாகூர் பெர்னட்ஷா போன்றவர்கள் கூறுவதாகும். உங்கள் சைவம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சாதிக்க முடியாதவைகளை ஒருசில ஆண்டுகளுக்குள் நாஸ்திக ரஷ்யா சாதித்துவிட்டதென்றால் நீங்கள் யோக்கியர்களாயிருந்தால் ஒப்புக்கொள்ளத்தான் செய்வீர்கள்.

உங்கள் சைவம் நாளடைவில் மாய்ந்துமடிந்து அழுவாரற்றபிணமாய் நாளடைய அடைந்துவரும் ஈனஸ்திதியை நான் நன்கு அறிவேன், உங்கள் சமயம் இன்னும் சில காலமாவது அதாவது பிறசமயங்கள் உயிரோடிருக்கும் வரை சற்றுயிராகவேனும் இருக்க நீங்கள் விரும்பினால், நீங்கள்மனிதஜீவரிடத்தில் அன்பு பூண்டு அவர்களின் உரிமைக்காக, அவர்களின் சமதர்மத்திற்காகப் பாடுபட முன்வரவேண்டும். இனி மக்களை ஏமாற்றி மாலையும், உபசாரப்பத்திரம் பெற்றுச் செல்லலாம். என்று புகழைவிரும்பும் தலைவர்களுக்கு உலகத்தில் இடமில்லை. ஏனவே புரட்டும், பித்தலாட்டமுள்ள தலைவர்களுக்குநாங்கள் ஒரு சிறிதும் கீழ்ப்படிய முடியாது என்பது நிச்சயம் என்று கூறிப் பேசிமுடித்தார்.

தலைவர் இடை இடையே பேச்சை முடித்துவிடும்படியாய்க் கூறியும் சபையோர்கள் மேலும் பேசும்படியாய் கேட்கவே திரு இராகவன் 30 நிமிஷம் பேசினார்.

பின்னர் தலைவர் எழுந்து முடிவுரையாக சைவத்தின் பெருமையையும், சைவர்கள் கடமையையும் பற்றி முதலிரு பண்டிதர்களும் நன்றாக எடுத்துக்காட்டினார்கள். இறுதியாக பேசிய அன்பர் இராகவன் அவர்களைப் பேச 5-நிமிச மளித்திருந்தேன் அவர்கள் எனது ஆணையைமீறி நீண்ட நேரம் பேசிவிட்டார்எதற்கும்கட்டுப்பாடும் வேண்டும், ஒருகட்டுப்பாடு இல்லையானால் எக்காரியமும் ஆற்ற முடியாது அந்நண்பர் ஆத்திர ஆவேசமும் கொண்டு பேசினும அவைகளெல்லாம் அவர் சைவத்தின் பால்கொண்ட அன்

பே காரணமென்றார்.

உடனேகூட்டத்தில் இல்லை இல்லை என்றும் 8000 சமணர்களை கழுவேற்றியகொலைபாதக சைவத்தை வளர்க்கவா? என்று கூச்சலும் குழப்பமுண்டாயிற்று. எனவே ஒரு பார்ப்பனர்முன்வந்து சமாதானம் சொல்லவே சபையோர் உட்கார் உட்கார் என்று கூச்சலிட்டார்கள் அமைதியுண்டாக்க சபையிலுள்ள சிலர் பெரு முயற்சி செய்தனர். சிறிது நேரம் சென்று அமைதி நிலவியது.

கடைசியாகத் தலைவர் அன்பர் இராகவன் அரசியல், சமூக இயல், மத வியல் முதலிய பல பொருட்களைப் பற்றிப் பேசிவிட்டார். அவைகட்கு பதில்கூறுவதற்கு இப்பொழுது எனக்கு சந்தர்ப்பமில்லை என்றார் கூட்டத்திலுள்ளோர் சைவத்தில் வர்ணாச்சிரமதர்ம முண்டா? என்றுவினவினார்கள்.

தலைவர்ஒன்றும்கூறாது கூட்டம் கலைந்ததுஎன்றார். பின்னர் காரியதரிசி மணியமூகுமாணிக்கசுந்தரஞ் செட்டியார் வந்தனோபசாரம் கூறும்பொழுது தலைவர் அன்பர் இராகவன் அவர்கள் கூறியதற்கு தங்கபதிலளித்தார் என்று கூறியதும் கூட்டத்திலே இல்லை இல்லையென்றும் வெட்கம் வெட்கம் என்று கூக்குரல் கிளம்பியது. சுமார் 50 60 பேர்கள் எழுந்து சைவம் ஒழிக! வர்ணாச்சிரமம்மாய்க! ஆஸ்திகம் அடிமாண்டு ஒழிக! என்று சப்தமிட்டுக்கொண்டு சென்றனர் அதன் மேல் கோவலில் இத்தகைய கூட்டத்திற்கு இடமளித்தது தவறு என்று இராகுகாலத்தில் இக்கூட்டம் கூட்டியதனால் வந்தபயன் என்றும் ஆஸ்திகப்பித்தரில் சிலர்கள்பேசிக் கொண்டு போனார்கள்.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் அதிக நேரம் வேலை செய்யச் சொல்லப்படுகிறார்களென்றும் மிராசுதார்கள் எடுத்துக்காட்ட ஆரம்பித்தனர்.

இப்படி புதிய பணக்காரர்கள் பழய பணக்காரர்களுடன் சண்டை போட்டதாலும், பழய பணக்காரர்கள் புதிய பணக்காரர்களின் அநியாயங்களைஎடுத்துகாட்டினதினாலும் சீர்திருத்த மசோதாவும், தொழிற்சாலை சட்டங்களும் நிறைவேறின. அப்பொழுதுதான் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) இங்கிலாந்தில் குடிபுகுந்து "முதல்" (Capital) என்னும் பிரபல புஸ்தகத்தை எழுதினார். அவருடன் இன்னும் பல உத்ஸாஹமுடைய சிறுவர்களும் சேர்ந்து ஊக்கத்துடன் கூலிஆட்களின் நிலைமையை மேம்படுத்த போராட ஆரம்பித்தனர், பர்னார்டுஷா (Bernard Shaw) ஸிட்னி வெப் (Sydney webb now Lord Pasefield) பியாட்ரிஸ் வெப் (Beatrice webb) அன்னி பெசன்ட் (Annie Besant) இன்னும் மற்ற பிரபலஸ்தர்கள் சேர்ந்து பேபியன் சொசைட்டியை ஸ்தாபித்தனர்.

மற்றொரு புறத்தில் ரஸ்கின் கார்லைல் வில்லியம் மாரிஸ் இவனும், மற்ற பெரியார்கள் மெஷினும், சுரங்கங்களும், மனிதனின் வாழ்க்கையை க்ஷீணிக்க செய்துவிட்டென வென்றும், தொழிலாளி புத்தியை உபயோகிக்க அவகாசம் கொடுக்காமலே ஒரே அர்த்தமில்லாத காரியத்தை திருப்பி திருப்பி செய்ய சொல்லபடுகிறார்களென்றும், கூலி ஆள்கள் தாங்கள் செய்யும் வேலைகளை சந்தோஷத்துடனே செய்யவே இல்லை என்றும் வற்புறுத்தினார்கள். இவர்களுடைய வார்த்தைகள் பெரும்பாலும் உண்மையே. ஆனாலும் கடவுள் மனிதன் கையில் நிலக்கரி, நீராவி, மின்சாரம், இன்னும் மற்ற பிசாசுகளை கொடுத்த பின்பு அப்பிசாசுகளை மனிதனுக்கு வேண்டிய சாமான்களை செய்ய செய்து, அச்சாமான்களைக் கொண்டு மனிதனின் வாழ்க்கையை மேம்படுத்துவதுதான் சாத்தியமென்பதை இவர்கள் மறந்து விட்டனர்.

டிஸ்ரேலி என்னும் கன்சர்வேடிவ் கக்ஷிபிரிவு தொழிலாளிகளில் அனேகருக்கு பார்லிமெண்ட் சபைக்கு வோட் கொடுக்க அருகராக சட்டத்தை மாற்றிய பின்பு, மேலும் மேலும் எல்லோருக்கும் வோட் கொடுப்பதே தொழில் கக்ஷியின் பிரதான கோட்பாடாக விருந்தது. பல ட்ரேட் யூனியன்களும் ஒன்று சேர்ந்து தாங்களே பார்லிமெண்டுக்கு தங்களுடைய பிரமுகர்களையே அனுப்ப முயன்றன. கீர்ஹார்டி, ராம்சே மாக்டனெல்ட் இன்னும் மற்றவர்கள் பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் கன்சர்வடிவ் கக்ஷிக்காரர்களும், லிபரல் கக்ஷிக்காரர்களும் வோட்டர்களின் ஆதரவைப் பெற மேலும் மேலும் எல்லோரும் வோட்டுகொடுக்க யோக்யதை ஏற்படுத்தினர். சமீபத்தில்தான் பால்ட்வின் கவர்ன்மெண்ட் இருபத்தோரு வயது பெண்பிள்ளைக்கு வோட் கொடுக்க யோக்யதையை ஏற்படுத்தினர்.

1907-ம் ஆண்டிலிருந்து உலகமெங்கும் விலைவாசிகள் ஏற ஆரம்பித்தன. வழக்கம்போல் சிலவேலை நிறுத்தங்கள் இங்கிலாந்தில் ஏற்பட்டு, கூலிஆட்கள் சிறிது அதிக சௌகரியங்களை பெற்றனர். பின்பு 1914-ம் வருடம் மகாயுத்தம் ஆரம்பித்தது. விலைகள் பன்மடங்கு வேகமாய் ஏற ஆரம்பித்தன. கவர்ன்மெண்டும் கூலி ஆட்களை பிரான்சில் போய் சண்டை பிடிக்க தூண்டியது. நல்ல-லிவ்ஷடர்கள் யுத்தபயித்தியத்தால் பிடிபட்டு போர்முனைக்கு போகவும், மிஞ்சியிருந்த கூலி ஆட்களுக்கு கூலி அதிகமாக உயர ஆரம்பித்தது. பல பெண்பிள்ளைகள்கூட கூலிவேலை செய்ய ஆரம்பித்தனர். அனேகர் சண்டைக்கு போனதால் கூலி ஆள்கள் ஒருவாறு சௌக்யங்களை அடைந்தார்களென்றேசொல்லவேண்டும். ஏனெனில் கவர்ன்மெண்டு கோடிக்கணக்காக போர்முனையிலும் இங்கிலாந்திலும் செலவழிக்க ஆரம்பித்தது. இந்த பணப்பெருக்கால் நிரந்தரமான வேலையும் அனேக சௌகரியங்களும் ஏற்பட்டன. போர்முனையில் நின்று யுத்தம் செய்தர்கள் பெருவம்பாலும் நல்ல சாப்பாடும் நல்ல உடையையும் நான்கு வருஷங்கள் அனுபவித்தார்கள்.

ஆனால் அனேகர் உயிர்துறந்தார்களென்பதையும், பலர் கால்கை இன்னும் மற்ற அவயவங்கள் சற்றும் உபயோகமில்லாது திரும்பினரென்பதையும், தேசத்திலேயே யிருந்து வியாபாரம் செய்த பலர் கோடீஸ்வரர்களாக நான்கு வருடங்களில் ஆய்விட்டனரென்பதையும், தேசத்தின் முதுகில் பெரும் கடன் சுமை தூக்கி வைக்கப்பட்டதென்பதையும், நாம் மறக்கக்கூடாது.


---


டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற முடிவு தேதி 15-5-34



முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

**S. K. வரதராஜலு, திருச்செங்கோடு,** சேலம் ஜில்லா S.I.

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

போடுவதும், நீற்றையாவது துளசி இலையையாவது, மக்களுக்கு ஆகாத ஒன்றை ஆடு கோழிகளுக்கு எறிகிற மாதிரி எறிவதும், தமிழ் மக்கள் பொறுமையை அளக்கும் பொருட்டு செய்யும் செய்கைகளாம். சென்னை ஆட்சி முதலமைச்சர் ஒருவருக்கும் அவர் மனைவியாருக்கும் நடந்த மானமுள்ள ஏற்பாடு இது தான். இதைப் பார்த்தபின்,

மதியாதார் முற்றம் மதித்தொரு கால் சென்று
மதியாமை கோடி பெறும்,

என்றும்

ஒட்டார்பின்' சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான்எனப் படுதல் நன்று

என்றும் சொல்லிப் பெரும் பொறுமையுடையவனும் மனம் ஏங்காதிருக்க முடியுமா? மானங்கெட்ட அறிவிலாரின் கண்கூடாக் கண்டதற் காலவாழ்வும், ஒருவாறு ஊன்றி உணரக்கூடிய அவர் தம் முற்கால வாழ்வும் எப்படிப்பட்டது எனத் தெளிவு பெறப் போதிய சான்றுகள் இவை போல் பலவுள.

தன் மானக் கொள்கையுடையார் பிறர் மானம் பேணாதவர்கள் என்றும், "சுயமரியாதை விரோதிக்குச் செருப்படி," "திருநீறிடுகிறவர் திருடர்," "மறு பிறப்புக் கொள்கையுடையவன் முடிச்சுமாறி", என்ற சொற்றொடர்களை குடியரசு, திராவிடனில் எழுதி வந்தது அதற்குச் சான்று என்றும் சொல்லி, இப்படிப் பட்டவர்கள் தன் மானம் இன்னதென அறியுந் திறத்தினரா எனக் கட்டுரையாளர் அறிஞர்களை வினவுகிறார். நல்லவேளை சில ஆண்டுகளுக்கு முன் தோன்றியுள்ளது இவ்வியக்கம் எனச் சொல்லுகிறார். ஆகையால் மேலே சொன்ன மூன்று இழிசொற்றொடர்களும் அண்மையில் தோன்றியவை என்பதே அவர் கருத்தாகும். "நீறில்லா நெற்றி பாழ்", என்று தன் கொள்கைக்கு மாறான கொள்கை யுள்ளவர்களுடைய சிறந்த உருப்பையே இழிவுபடுத்திக் கூறும் முதுமொழி தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் பெருமையுடையது என்பதை அவர் ஒப்புக் கொள்வார். இது போன்ற இழிமொழிகள் எத்தனை உள என்பதை அவரே தேடிக் கணக்கிடட்டும். பிறர் மானத்தைக் கெடுக்க வழிகாட்டினவர் யாவரென அவரே சொல்லப்பட்டும், அல்லது அவருடைய வினவுக்கு விடையை எதிர்பார்க்கும் அறிஞர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். இழிசொல் கூறுவதை ஊக்கப்படுத்த இதை எடுத்துக் காட்டவில்லை. "பிறர்க்கு மரியாதையின்றி ஒழுகிறவர்கள் பிறரால்* அவமரியாதை அடைந்து வருதலை நாம் கண்கூடாக் காண்கின்றோம்", எனக் கட்டுரையின் துவக்கத்தில் அவர் சொன்ன நியாயத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகுமா என்று ஆராய இதைக் குறிப்பிடுகிறேன். சீர்காழிப் பார்ப்பனச் சிறுவர் ஒருவர், தன் பாட்டனார் வயதுள்ளவர்கள், தன்னைப் போல் தாங்கள் கொண்ட கொள்கையிற் பற்றுடையவர்கள், மக்கள் அறிவிலும் நடையிலும் உயரவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் கைம்மாறு கருதாது உழைத்தவர்கள், அறிவில் தனக்கு எத்துணையும் பின்னடையாதவர்கள், அன்பில் தனக்கு எவ்வளவோ உயர்ந்தவர்கள், இப்படிப்பட்டவர்கள் தன்னுடைய கொள்கைக்கு இடையூறாயிருந்த காரணத்திற்காக, அவர்கள்மேல் மொழிந்த இழிமொழிகளை கேளுங்கள். "புத்தரொடு பொறியில் சமணும் புறங்கூற", "குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும்", "புத்தர் சமன் கழுக்கையர் பொய்", "புத்தர் புறங்கூறிய புன்சமணர்", "தீய கருமஞ் சொல்லுஞ் சிறு புன்றேர ராமணர் பேய்யே யென்ன", "குண்டமனர் துவர்க் கூறை கண்மெய்யிற் கொள்கையினர் புறங்கூற" என்பன போன்றனவாம். இவர் இவ்விழிமொழிகளை கோபத்தில்சொல்லிவிடவில்லை. ஒருமுறைஇருமுறை தவறிச் சொன்னவையல்ல. கடவுளை வழிபடும் பதிகங்களில், "பூசுரன் ஞான சம்பந்தன்", நற்றமிழ் ஞான சம்பந்தன்", என்பன போன்ற சொற்களால் தன்னைத் தானே வாய் கூசாது உயர்த்திக்கூறும் கடைசிப் பாவுக்கு முந்தியதில், தன்னின் மாறுபட்டவர்களைத் திரும்பத் திரும்ப வாயாரச் சொன்ன வசைமொழிகளாம் இவை. அவர்தான் அவருடைய வயதுக்கும் அப்பொழுதிருந்த நாட்டுநிலைமைக்குந் தகுந்தவாறு இவ்விழிமொழிகளைச் சொன்னாரென ஒதுக்கிவிட்டாலும், அக்காலத்துக் கழுவுக்கு அஞ்சிச் சைவர்களான மக்களுடைய பின் தோன்றலான நாமும் அவ்விழிமொழிகளை மனப்பாடம் பண்ணி, அன்பே சிவம் என்ற உரிமை கூறும் சிவ வழிபாட்டில் நம்முன்னோர்களையும், கழுமரத்திற்கு மஞ்சாது தன் சமயத்தை விடாத திடமன மக்களின் பின் தோன்றல்களாய் இப்பொழுதும் பழைய சமயத்தில் பற்றுடையோராயத் திகழ்பவர்களையும், தூற்றபழக்கப்பட்டிருக்கிறோமென்றால், பிறர் மானம் அழிப்பதில் நாம் எவ்வளவு தேர்ந்தவர்கள் என்பது தெளிவாகும். தலைமுறை தலைமுறையாகக் கடவுள் வழிபாட்டிற்கு ஒத்தது என ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவழக்கம் எளிதில் நம்மைவிட்டு அகலாதுதான். ஒரு கொள்கையுடையவர்கள் மாறுபட்ட கொள்கையுடையவர்கள் மானங்கெடும்படியான சொற்களை வெளியிடுவது தங்கள் மானக்கேட்டிற்கு வழி தேடிக் கொண்டதாகுமெனக் கட்டுரையாளர் உள்ளத்திற் பதிந்தது ஒரு நற்குறியேயாகும். ஏறக்குறைய முப்பது ஆண்டுகட்கு முன் என்னுறவினர் ஒருவருடன் செட்டி நாட்டு மனவி நற்தொன்றிற்குப் போயிருந்தேன். எங்களுக்கும் சில பருத்தி நூல்காரர்களுக்கும் சேர்த்து ஒரு இடத்தில் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மணவினை முடிந்த பின் நன்பகல் ஊண் அருந்த இருவரும் குறிப்பிட்ட இடத்திற்குப் போனோம். நாங்கள் அவ்விடஞ் சேருமுன் சில நூல்காரர்கள் சாப்பிட்டு விட்டு, உடலில் சந்தனம் பூசி, வாயில் வெற்றிலை புகையிலையென்று கொண்டு, விசிறி பிடித்து வீசிக் கொண்டு தெருத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் வெளியில் நடந்த களைப்பால் திண்ணையில் ஒருபுறம் உட்கார்ந்தோம். "சாப்பிட உள்ளே போகலாமே", என்றார் எங்களைப் பார்த்த அவர்களுள் ஒருவர் காலையில் குளியாத சில நூல்காரர்கள் குளிக்கப் போயிருப்பதாயும் அவர்கள் குளித்துவிட்டு வந்து சாப்பிட்ட பின் நாங்கள் சாப்பிடலாம் என்றும் இன்னொருவர் சொன்னார். அரைமணி நேரம் பொறுத்துக் குளிக்கச் சென்றவர்கள் திரும்பினார்கள். இதற்குள் திண்ணையிலிருந்தவர்கள். படுத்துக் குறட்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். என்னுறவினர் உட்கார்ந்த இடத்தில் சுவரில் சாய்ந்துகொண்டிருந்தார். நான் உட்கார்ந்து கொண்டும் திண்ணையின் கீழிருந்த பந்தலினடியில் காற்றுக்காக உலாவிக் கொண்டுமிருந்தேன். இன்னும் அரைமணி நேரம் பொறுத்துப்பிந்திவந்தவர்களும்சாப்பிட்டுவிட்டுவந்து சந்தனம் பூசிவெற்றிலை புகையிலை மெல்லத் துவக்கினார்கள். முதலிற் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினவர்களிற் சிலர் எழுந்து உட்கார்ந்து கொண்டும், சிலர் படுத்துப் புரண்டு கொண்டும், இன்னும் சிலர் குறட்டையிலிருந்து நீங்காமலும் இருந்தார்கள், "இப்பொழுது சாப்பிடப் போகலாமே" என எங்களைப் பார்த்து ஊக்கம் நீங்கி உட்கார்ந்த ஒருவர் சொன்னார். உடலில் சந்தனமும் வாயில் வெற்றிலை புகையிலையும் கையில் விசிறியுமுடைய புதியவரொருவர், சமையல் காரர்கள் இன்னும் சாப்பிடவில்லை என்றும் அவர்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் நாங்கள் சாப்பிடப் போகலாமென்றும் சொன்னார். மற்றவர்களைவிடப் பருத்த உடலுடன் அரைத் தூக்கமாகப் படுத்திருந்த ஒருவர் எங்கள் இருவரையும் பார்த்து, "முற்பிறப்பில் யாரைப் பட்டினியிருக்க வைத்துச் சாபபிட்டீர்களோ, இப்பிறப்பில் இப்படி வாய்த்தது" எனச் சொன்னார். என் உறவினர் சுவரில் சாய்ந்த படியே தலையை அசைத்துக் கொண்டார். உலாத்திக் கொண்டிருந்த நான் படுத்திருந்தவரைப் பார்த்து, "முற்பிறப்பு, பிற்பிறப்பு உண்டோ இல்லையோ, எனக்கு உறுதி இல்லை. முற்பிறப்பும், பிற்பிறப்பும் உண்டென்பதும் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைக்குத் தக்கவாறு மறுபிறப்பில் நலம் தீது வருமென்பதும் உங்கள் உறுதியான கொள்கை யென்பது உங்கள் வாய்ப்பிறப்பிலிருந்து தெரிகிறது. யாரையாவது நான் பட்டினி போட்டிருந்தால் தெரியாமல் பட்டினி போட்டிருந்திருக்கலாம். தெரிந்து போட்டிருந்தாலும் அதனால் அடுத்த பிறப்பில் பட்டினி போடப்பட வேண்டிவரும் என்று தெரியாது செய்த செய்கையாயிருந்திருக்கலாம். இப்பொழுது தெரிந்தும் இனிவரப் போவது தெரிந்தும் இவ்வாறு நடந்து கொண்ட உங்க வெறும் பட்டினியோடு போமா போமா வேறு கேடும் வருமா என்பதற்காக இறங்குகிறேன்", என்று சொன்னேன். எங்கள் முகமாக ஒருச் சாய்த்துப் படுத்துக் கொண்டு மேலே கண்டபுன் மொழிகளைச் சொன்னவர், என் சொற்களைக் கேட்ட பின், மனமாற்றக் குறி ஒன்றுமின்றி, மறுபுறமாகத் திரும்பிக் கொண்டு மறுபடி குறட்டை போடத்துவக்கினார். பக்கத்திலிருந்த மற்ற அக்குழுத்தார் தங்களுக்குள காதுக்குள் பேசிக்கொண்டார்கள். இப்புன் மொழி சொன்ன கன்னெஞ்சும் குற்றறிவும் உடையார் நந்தனைத் தீயில் பொசுக்கிக் கொன்ற சிதம்பரத்தில் சட்டவாதத் தொழில் புரிந்து செட்டியார் பணத்திற்குப் பங்காளியாயிருந்து செல்வாக்கும் செல்வமும் தேடிய ஒருவரென என்னுறவினர் பின்னால் எனக்குச் சொன்னார். அவருடைய பருமனையும் வயதையும் தூக்கிப் பாராமல் நான் துடுக்கான விடை சொல்லிவிட்டதாக இப்புன்மொழிக் கன்னெஞ்சக் குற்றறிவினர் அன்று மாலை சற்று சிணுங்கிக் கொண்டாராம் என் சொல் அவர் உள்ளத்தில் உரைக்க அவ்வளவு நேரமாயிற்று. மறுபிறப்புக் கொள்கையுடைய இவ்விழிவுள்ளத்தவரை முடிச்சுமாறி என்று குற்றம் சாட்டப் போதுமான காரணம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவரை வேறு என்னென்றழைக்கலாம் என்பதைக் கட்டுரையாளராவது அவர் வினவும் அறிஞர்களாவது எடுத்துச் சொன்னால் நானும் பிறதன்மானக் கொள்கையார்களும் என்றும் மறவா நன்றியுடையோராவோம். மறுபிறப்புக்கொள்கையினுண்மை எவ்வாறிருந்தாலும், அதை ஓயாமற் சொல்லுகிறவர்கள் பிறர் பொருளை வவ்வுந்திறனுடையாரும், அவர் வலையிற் பட்டு மதியிழந்த மாக்களுமாவார்கள், என்பதை இதுவரைக் கட்டுரையாளர் அறிந்திராவிட்டாலும் இனியேனும் ஆய்ந்தறிய அவரை வேண்டுகிறேன்.

செங்கற்பட்டு மாநாட்டில் மக்கள் பெயர்களுக்குப் பின்னால். நாயுடு, முதலியார், பிள்ளை என்ற சொற்களைச்சேர்க்காது ஒழித்துவிட்டால் மக்களுக்குள் ஒற்றுமையுண்டாகும் என்று செய்ததீர்மானத்தையும், தீ

மானம் செய்தோர்கள் அறிவையும், பிறர்மானம் பேணும் முறையில் கட்டுரையானர் ஏளனம் செய்கிறார். இத் தமிழ் நாட்டிலிருந்த புகழேந்திப் பிள்ளையையும், ஒட்டக்கூத்த முதலியாரையும், கம்பநாடாரையும், கபிலச் சாம்பாரையும், காளமேகச் செட்டியாரையும், படிக்காசுக் கோனாரையும், நக்கீர ஆசாரியையும், செயங்கொண்ட நாய்க்கரையும் பற்றி நூல்களில் படித்ததுண்டா, அல்லது பழைய தமிழர்கள் வாலில் லாப் பெயருடையோராய் இருந்தனரா எனக் கட்டுரையாளர் ஆராய்வாராக, அல்லது அறிஞர்களைக்கேட்டு அறிவாராக ஐயர் என்ற வாலைத் தனக்குச் சேர்த்துக்கொண்டு அது ஒட்டுவதற்காக மற்றவர்களுக்கும் வேறு வேறு தனிவாலை ஒட்டவைத்தார்கள் என்பது சரிதானு என்றும் பார்ப்பாராக. இவ்வொட்டு வேலை இன்றும் நடந்து வருவது உற்று நோக்குவார்க்குத் தெரியும்.

கடவுளுணர்ச்சியுள்ளோர் கூட்டத்தில் அறிவியல் காரர்கள் வந்து கடவுள் வணக்கம் செய்யக்கூடாதென்றும் தங்கள் கொள்கைகளைத் தீர்மானமாகக் கொண்டுவரவேண்டுமென்றும் வலுச்செய்வதாகக் கட்டுரையாளர் கூறுகிறார். எந்தக் கூட்டத்தில், எப்பொழுது எதை வற்புறுத்தினர்கள் என்று திட்டமாகச் சொல்லியிருந்தால் திட்டமானவிடை சொல்ல முடிந்திருக்கும். முற்காலத்தில் தமிழ் மக்கள் தண்ணீரில் குளித்து உடல் நலம் பெற்று வாழ்ந்தார்கள், இப்பொழுது வெந்நீரில் குளித்து உடல் நலம் குன்றி வருகிறார்கள், ஆகையால் தண்ணீரில் குளிப்பதன் நன்மையைப் பரப்ப ஒரு கூட்டங் கூடவேண்டுமென அவ்வபிப்பிராயமுள்ள பல இனமக்களையுங் கலந்து பொதுக் கூட்டங் கூட்ட முடிவு செய்தபிறகு, அக்கூட்ட அழைப்பு அறிக்கையின் தலைப்பில் லிங்கத்தையாவது. நாமத்தையாவது. பிறையையாவது, சிலுவையையாவது அச்சிட யாருக்கேனும் உரிமையுண்டா? அப்படிப்போட முயன்றால் அதைத் தடுக்க மற்றவர்களுக்கு உரிமையில்லையா? பிறகு அப்படிக் கூடிய கூட்டத்தில், "தோடுடைய செவியின், விடையேறி" என்ற பாடலைப் பாட ஏற்பாடு செய்வதும், நியாயங் கேட்டால் குளத்தில் இறங்கித் தண்ணீரில் தகப்பனர் குளித்த பொழுது பிள்ளைபாடிய பாட்டு இது; ஆகையால் தண்ணீரின் பெருமையைப் பேசக் கூடிய கூட்டத்தில் இந்தப் பாட்டைப்பாடுவது பொருத்தமாகும் என அதாவது நேர்மையா? தை மாதப் பனியைப்பற்றிப் பேசக்கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில், "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று வழிபாடு ஆரம்பித்து, கிறிஸ்து தை மாதத்தில் பனி இரவில் பிறந்தவரானபடியால் அம்மாதப் பனியைப் பற்றிப் பேசுங் கூட்டத்தில் கிறிஸ்துநாதர் சொன்ன கடவுள் வழிபாட்டைச் சொல்வது சரிதான் எனச்சொல்வது முறையா? அந்தக் கூட்டத்தில் பெரும்பாலார் கிறிஸ்தவர்களாக இருக்குங் காரணத்தால் அவ்வுரிமை அவர்களுக்கு வந்துவிடுமா? தென்னையின் சிறப்பைப்பற்றிப் பேசக்கூடிய கூட்டத்தில் "அல்லாஹு அக்பர்'; என ஆரம்பித்து, தென்னைமணற் பாங்கான நிலத்தில் வளரும்; அரேபியா பெரிய மணல் நாடு; அம்மணல் நாட்டிற் பிறந்தவர் மகம்மது அவர் சொன்னது "அல்லாஹோ அக்பர்; தென்னந் தோப்பு முதலாளிகளிற் பலர் மகம்மதியர்கள் என்று காரணம் சொல்லி வற்புறுத்துவது பிறர் கூட்டுறவை விரும்புவோரின் நடவடிக்கையா? தமிழின் பழமையை எடுத்துக் காட்டுவதற்குக் கூடிய பொதுக் கூட்டத்தில், "பித்தா, பிறைசூடி," என்று துவக்கிய சிவ வழி பாட்டுப் பாட்டைப் பாட ஏற்பாடு செய்வதும் நியாயம் கேட்டால் தமிழிசை பரப்ப விரும்பிச் செய்ததாகச் சொல்வதும் நேர்மையா? ஒப்பாரி ஜர்மன் இசையா, ருஷிய இசையா? தனித் தமிழ் இசைதானே. அவ்விசையையும் அதிலுள்ள நுண்ணறிவையுங் காட்ட ஏற்பாடு செய்யவேண்டாமா? காலிலும் இடுப்பிலும் மணிகட்டி, ஒரு கையில் கோழியும் ஒரு கையில் அறுவாளும், தலையில் தீப்பந்தமும் பூண்டு, "மாடன், இருளன், காட்டேரி" என்று துவக்கும் பாட்டுப் படுவது, காதணி பூண்டு காளையேறி கூலையாடிய காலத்திற்கு முற்பட்ட தமிழ் நாகரிக வெளிப்பாடல்லவா? அதையும் பார்த்து அவ்விசையையுங் கேட்க ஏற்பாடு செய்யவேண்டாமா? இராமேஸ்வரக் கோயிலை மராட்டிய நாற்காரர்களும், திருச்செந்தூர்க் கோயிலை மலையாளநாற்காரர்களும், பழனிக்கோயிலை பிறநாற்காரர்களும் சில ஆண்டுகளுக்கு முன் தாயகமாக்கிக் கொண்டதை, அவர்களிடமிருந்து விடுவித்து உரியாரிடம் சேர்ப்பிக்கக் கூடிய கூட்டத்தில் கோயில் வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவர்கள் குறுக்கிடல் குற்றமாகும். மாடனுக்குத் தென்னங்கள் படைப்பது சிறப்பா, பனங்கள் படைப்பது சிறப்பா என்று முடிவுசெய்யக் கூடிய கூட்டத்தில் கள்ளுண்ணுர் வந்து தலையிடுவது தவறாகும். தமிழைப்பற்றிப் பேசக்கூடிய பொதுக் கூட்டத்தில் மதுரைவீரன் சிறப்பைச் சொல்ல வருவதும் தடுத்தால் கோணிக்கொள்வதும் எள்ளளவும் சரியான நடையல்ல. சைவத்தமிழர் கூட்டமென்றுவது கடவுள் வழிபாட்டுத் தமிழர் கூட்டம் என்றுவது தனிக் கூட்டங் கூட்டிப் பாமாலை அணிவதை பிறர் குறை கூறுர்கள். பொதுத்தமிழ் கூட்டம் என வெளியிட்டுவிட்டு சமயக்குறியையும், சமய முறைகளையும், சமயக் கொள்கைளையும் புகுத்துவது குற்றமா, அதைத் தடுப்பது குற்றமா. என அறிஞர்களே கட்டுரையாளருக்கு விடைகூறட்டும். பல திரப்பட்ட கூட்டங்களை அண்டியா கடவுள் வழிபாடு வளரவேண்டும்? கடவுள் வழிபாட்டின் திறக்குறையை அல்லவா அது காட்டுகிறது? பாரோஸ் (Barrows) என்ற அமெரிக்கக் கிறிஸ்தவக் கலைஞர் பெயரால் நடைபெற்று வருகிற கிறிஸ்துமத சொற்பொழிவாளர் ஒருவர் நம் நாட்டில் பல இடங்களில் சில வாரங்களுக்குமுன் சொற்பொழிவாற்றினர். சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் அண்டர்சன் மண்டபத்தில் ஆறுநாள் தொடர்ந்து நடந்த சொற்பொழிவு ஆறுக்கும் நான் போயிருந்தேன். சொற்பொழிவாற்றியவர் கிறிஸ்தவர். தலைமை பூண்டவர்களில் ஐவர் கிறிஸ்தவர். கேட்டவர்களிற் பெரும்பாலார் கிறிஸ்தவர். சொற்பொழிவின் நோக்கம் கிறிஸ்தவ உண்மையைப் பரப்புவது சொற்பொழிவுக்குப் பணம் ஈந்தவர் அந்நோக்கம் பூண்ட கிறிஸ்துவர். எனினும் எந்நாளிலாவது சொற்பொழிவின் முதலிலாவது நடுவிலாவது கடையிலாவது கிறிஸ்து வழிபாடாவது கடவுள் வழிபாடாவது வணக்கமாவது கிடையாது. இதுவே அறிவுடையோரின் முன் மாதிரியான நடக்கை. கடவுள் பற்றுடைய நம்நாட்டாரும் இதைப் பின்பற்றுவார்களாக.





"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினுல் தயார்செய்யப்பட்டுவது. வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்
A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.




'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு
ஒரு கைகுட்டை இனும்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை


மார்க்ஸும் லெனினும்
காட்டிய வழியில் தீர்க்கமாயுழைக்கத்
தோழர்காள் வருக!

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

இது புராண காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா .4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# பகுத்தறிவு வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பேர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்ப வேண்டும்.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# பகுத்தறிவு.

சுயமரியாதை தினசரி.

சமய சமூக அரசியல் விடுதலைக்கு பரிந்து போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேசசம்மந்தமான விடுதலைபோராட்டச்செய்திகள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். ஆணித்தரமான அபிப்பிராயங்களும், அழுத்தமான கண்டனங்களும், அவசியம் காணலாம்.

எங்கும் கிடைக்கும்.

தனி இதழ் காலணா.

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

ஆறு மாத சந்தா ரூ. 5.

வருட சந்தா ரூ. 9.

விலாசம்:— மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.


Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.